
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

அறந்தை நாராயணன்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன் மலைச்சிற்பம், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி: நேஷனல், மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

எழுதியவர் :
அறந்தை நாராயணன்

சாகித்திய அக்காதெமி

PATTUKOTTAI KALYANASUNDARAM - Monograph in Tamil by Arnathai Narayanan, Sahitya Akademi, New Delhi, 1998. Rs. 25

முதல் வெளியீடு : *1998*
ISBN - *81-260-0578- 5*

சாகித்திய அக்காதெமி
தலைமை அலுவலகம் :
ரவீந்தர பவன், *35,* பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி - *110 001.*

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி - *110 001.*
109, ஜே.ஸி.சாலை, பெங்களூர் - *560 002.*

'குணா பில்டிங்' *304-305,* அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - *600 018.*

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பார் சாலை, கல்கத்தா - *700 053.*

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் - *400 014.*

விலை ரூ. *25.*

அச்சிட்டோர் : வெல்டன் பிரஸ், சென்னை - *21.*

உள்ளே ...

இந்த நூலின் ஆசிரியர்

ஆங்கிலம் மற்றும் இந்திய மொழிகளில் சினிமா பற்றி எழுதப்பட்டவற்றுள் 'மிகச் சிறந்த நூல்' என்று 1982-ம் ஆண்டில் நடைபெற்ற 'ஃபிலிமோத்ஸ்வ்'-வில், திரைப்பட வளர்ச்சிக் குழுமத்தால் தேர்வு செய்யப்பட்ட "தமிழ் சினிமாவின் கதை" குடியரசுத் தலைவரின் முதற் பரிசைப் பெற்றது.

சினிமா பற்றி, இந்நூலாசிரியர் எழுதிய முதல் நூல் இது; இவ்வகையில் தமிழின் முதல் நூல் இதுவேயாகும்.

1987-ல் 'சோவியத் நாடு - நேரு விருது இந்நூலாசிரியருக்கு வழங்கப்பட்டது.

இந்நூலாசிரியர் எழுதிய "சுதந்திரப் போரில் தமிழ் சினிமா" தமிழ்நாடு அரசின், தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் முதற் பரிசை 1989-ம் ஆண்டில் பெற்றது.

சங்கீத நாடக அகாடெமியின் தமிழகக் கிளையான 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்' இந்நூலாசிரியருக்கு 'திரைப்பட ஆய்வாளர்'- என்னும் வகையில் 1991-ம் ஆண்டில் 'கலைமாமணி' விருது வழங்கியது.

தொடர்ந்து "நாகரீகக் கோமாளி என்.எஸ்.கிருஷ்ணன்", "திராவிடம் பாடிய திரைப் படங்கள்", "குடியினால் குடை சாய்ந்த கலைக் கோபுரங்கள்" - ஆகிய ஆய்வு நூல்களை இவர் எழுதினார்.

இவர் எழுதியுள்ள இதர வரலாற்று நூற்கள்: 'விடுதலைப் போர் வீராங்கனை கல்பனா', "இன்குலாப்-ஜிந்தாபாத்!" (பகத் சிங் வரலாற்று நாடகம்), 'விடுதலைப் போரில் தொழிலாளர்கள்', 'மக்கள் கலைஞர் எம்.பி. சீனிவாசன்', 'கடைசி இலையுதிர் காலம்' (வி.ஐ. லெனினது இறுதி நாட்கள் பற்றிய மொழிபெயர்ப்பு நாடகம்).

திரையுலகப் பின்னணியில் 'ஜக்கா', 'விண்ணிலிருந்து மண்ணிற்கு...', 'டூப்', 'மோகத்திரை' ஆகிய புதினங்களையும் இவர் எழுதியுள்ளார்.

இதுவரை, இவர் எழுதியுள்ள பலவகை நூல்களின் எண்ணிக்கை முப்பத்தெட்டு.

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் இவரது 'சுதந்திரப் போரில் தமிழ் சினிமா' நூலையும், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் இவரது 'ஜக்கா' புதினத்தையும் 1995-1996 கல்வியாண்டின் பட்டப்படிப்பு பாட நூற்களாக நிர்ணயித்தன.

இவரது 'தமிழ் சினிமாவின் கதை' நூல் 1981 நவம்பர் பதினேழாம் நாளன்று, சென்னையில் திரு. தொ.மு.சி.ரகுநாதன், 'தீபம்' நா. பார்த்தசாரதி, கலைஞர்கள் எஸ்.வி. சகஸ்ரநாமம்', 'சோ' ராமசாமி, சிவகுமார், இயக்குநர் ருத்ரய்யா, அப்போதைய மாநில அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் வாழ்த்துரைகளுடன் வெளியிடப்பட்டது.

நாடகாசிரியரும் திரைப்பட இயக்குநருமான கோமல் சுவாமிநாதன் 'தமிழ் சினிமாவின் கதை' குறித்து நூலாசிரியருக்கு வெளியீட்டு விழாவுக்கு மறுநாளே எழுதினார்: "தங்களின் 'தமிழ் சினிமாவின் கதை'யைப் படித்து முடித்தேன். காலங் காலத்திற்குப் பயனளிக்கும் ஒரு நூலை எழுதியிருக்கிறீர்கள். உ.வே. சாமிநாதய்யரின் 'என் கதை', டி.கே. ஷண்முகத்தின் 'எனது நாடக வாழ்க்கை' இவை போன்ற புத்தகங்களே நான் ஒரே மூச்சில் படித்தவை. இப்போது 'தமிழ் சினிமாவின் கதை'. எத்தனை விஷயங்கள்? எத்தனை கலைஞர்கள்? எத்தனை சரித்திரங்கள்? அப்பப்பா ! என்ன சிரமப்பட்டிருப்பீர்கள்? உறுதியாகச் சொல்லுவேன், பின் வரும் தலைமுறைக்கு ஒரு சினிமா பைபிளைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறீர்கள். தமிழ் சினிமா எதைச் சாதித்ததோ இல்லையோ, தன்னைப் பற்றிய ஒரு இலக்கியத்தைப் படைத்துக் கொண்டது".

இந்நூலாசிரியரான அறந்தை நாராயணனுக்குத் தொழில் 'எழுத்து'.

முசுகுந்த நாட்டு வழிநடைக் கும்மி

"சோழநாடு சோறுடைத்து" என்று பெயர் படைத்த சோழ நாட்டின் பெரும் பகுதியை உள்ளடக்கியது தஞ்சாவூர் மாவட்டம்.

"தாயில்லாப் பிள்ளையும் வளரும் தஞ்சாவூர்!" என்று, என்றோ ஒரு காலத்தில் அந்த மாவட்டத்துக்குப் பெருமை இருந்ததாம்.

காவிரி ஆறும் அதன் கிளை நதிகளும் அந்த மண் பரப்பை வளம் கொழிக்கச் செய்தன.

சோழ மன்னர்கள் தமது ஆட்சியின் மாட்சியை நிலை நிறுத்த 'கூப்பிடு' தூரத்தில் ஒரு கோவில் என எண்ணற்ற கோவில்களைக் கட்டினர். 'கோவில் மான்யம்', 'அர்ச்சகர் மான்யம்', 'தேவதாசி மான்யம்' போன்றவை மன்னர்களால் சட்ட பூர்வமாக வழங்கப்பட்டன. இசை, நாட்டியம், சிற்பம் போன்ற நுண்கலைகள் செழித்து வளர்ந்தன.

இவை பழங்கதைகள்.

பிரிட்டீஷ் ஏகாதிபத்யம் இந்தியா முழுவதையும் தனது ஆளுமையின் கீழ் கொண்டு வந்தது. கிராமங்களுக்கே சொந்தமாக இருந்த விளை நிலத்தை வாங்கவும் விற்கவுமான பண்டமாக்கியது பிரிட்டீஷ் ஆட்சி. நில உடைமையாளர்களை உருவாக்கியது; இந்த நிலப்பிரபுக்கள் ஐயாயிரம் ஏக்கர், ஏழாயிரம் ஏக்கர் 'பட்டா' பெற்ற பண்ணையார்களாக மாறி, பண்ணையடிமைகள் - வாரச் சாகுபடி குத்தகைதாரர்கள் போன்ற விவசாய உழைப்பாளர்களைச் சுரண்டிக் கொழுத்து, சிற்றரசர்கள் போல கிராமப்புறங்களில் ஆதிக்கம் செலுத்த அனுமதித்தனர். கோவில்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கும் மிட்டா-மிராசுகளே தர்மகர்த்தாக்க ளானார்கள்.

பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுக்காக்களில் ஜமீன்தார்களை பிரிட்டீஷ் ஆட்சியாளர்கள் நியமித்தனர்.

(தஞ்சாவூர் மாவட்டம் இப்போது மூன்றாகப் பிரிக்கப் பட்டடுள்ளது).

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில் (தாலுக்காவில்) செங்கப்படுத்தான்காடு என்னுமோர் கிராமம். அந்தக் கிராமத்தில் அருணாசலம் பிள்ளை என்பவர் ஒரு கவிஞர்.

"முசுகுந்த நாட்டு வழிநடைக் கும்மி" என்னும் பாடல் புத்தகத்தை, இலங்கைத் தீவில் பிழைக்கச் சென்று வாழ்ந்து வந்தபோது, செங்கப்படுத்தான்காடு கவிராயர் அருணாசம் பிள்ளை எழுதி வெளியிட்டார்.

பட்டுக்கோட்டையைச் சுற்றியுள்ள வேளாளர் கிராமங்கள் 32-ன் இயற்கை வளம், அவற்றுக்குப் போகும் பாதைகள், வழியிலுள்ள கோவில்கள் அவற்றின் குளங்கள் பற்றி வர்ணிக்கும் அந்நூலை, ஒரு கணவன் தனது மனைவியை அழைத்துக் கொண்டு ஊரூராகச் செல்லும்போது பாடிய வழிநடைக் கும்மியாக அருணாசலக் கவிராயர் இயற்றியிருந்தார்.

அருணாசலக் கவிராயருக்கு ஆறு குழந்தைகள். நான்காவதாக 13-4-1930 அன்று ஓர் ஆண்குழந்தை. கவிராயர் அந்தப் பிள்ளைக்கு 'கல்யாணசுந்தரம்' என்று பெயரிட்டார்

உள்ளூர் 'திண்ணை'ப் பள்ளிக்கூடத்தில் அண்ணன் கணபதியுடன் ஓராண்டு 'அரிச்சுவடி' படித்ததோடு கல்யாணசுந்தரத்தின் பள்ளிப் படிப்பு முடிந்தது.

நாடகம் பார்ப்பது, சினிமா பார்ப்பது, பார்த்துவிட்டு அவற்றில் கேட்ட பாடல்களை வரி பிசகாமல் பாடிக் கொண்டிருப்பது - இவை, சிறுவன் கல்யாணசுந்தரத்தின் விருப்பமான பொழுது போக்குகள்.

தமிழில் பேசும் படங்கள் 1931 அக்டோபர் முதல் வெளிவரத் தொடங்கியிருந்தது. எனவே சிறுவன் கல்யாணசுந்தரத்தின் வளர்ச்சி பேசும் படங்களோடு இணைந்தே இருந்தது. செங்கப்படுத்தான்காட்டுச் சிறுவர்கள் பட்டுக்கோட்டை நகரம் வந்தால்தான் சினிமா பார்க்க முடியும். சிறுவர்கள் தங்களோடு கல்யாணசுந்தரத்தைக் கூட்டிக் கொண்டு செல்வார்கள். ஏன்? உயரமான உருவம் கொண்ட கல்யாண சுந்தரத்தால் எப்பேர்ப்பட்ட கூட்டத்திலும் முண்டியடித்து 'டிக்கெட்' வாங்கிவிட முடியும்.

□ □ □

போராட்டச் சூழலில்...

பிரிட்டீஷாரின் 'தென்னிந்திய ரயில்வே கம்பெனி' மீட்டர்கேஜ் ரயில்வே பாதைக்குத் தனது மத்தியத் தொழிற்சாலையை தஞ்சாவூர் மாவட்டத்தின் நாகப்பட்டணத்தில் வைத்திருந்தது. தென்னாட்டின் மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், காலனி நாடுகளுக்குக் கூலியாட்களை ஏற்றிச் செல்லவும், பண்டங்களை இறக்குமதி செய்யவும் நாகை துறைமுகத்தை ஏகாதிபத்ய அரசு பயன்படுத்தி வந்தது. அங்கே 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தில் கடுமையாக வேலை வாங்கப்பட்டார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய நிறுவகத் தலைவர்களில் ஒருவரும் தமிழ் மாநில முதல் கம்யூனிஸ்டுமான ம.சிங்காரவேலர், சென்னையில் 'தொழிலாளர் சங்க'த்தை 1918ம் ஆண்டில் தோற்றுவித்தார். அவரது வழி காட்டலில் வி. பி. பக்கிரிசாமி பிள்ளை. 1919-ல், 'தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்க'த்தை நாகப்பட்டணத்தில் ஆரம்பித்தார், இச் சங்கம் அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரசுடன் இணைக்கப்பட்டது.

ஏற்கனவேயே, தேச விடுதலை இயக்கத்தின் முன்னோடி அமைப்பாக நாகப்பட்டணத்தில் 'தேசபக்த சமாஜம்' இயங்கி வந்தது, மகாகவி சுப்ரமணிய பாரதியார், 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ. சிதம்பரம் பிள்ளை, மகாத்மா காந்திஜி, பெரியார் ஈ.வே. ராமசாமி, திரு. வி. கல்யாணசுந்தரனார் போன்றோர் தேசபக்த சமாஜத்தில் சொற்பொழிவாற்றியுள்ளனர்.

நாகைப் பகுதியில் சுதந்திர வேள்வித் தீ பரவத் தொடங்குவது கண்டு பதறிப் போன பிரிட்டீஷ் அரசு, தனது ரயில்வே வொர்க்ஷாப்பை திருச்சி மாவட்டம் பொன்மலைக்கு மாற்றுவதன் மூலம் புரட்சிகர இயக்கத்தை நசுக்கிவிட 1927-ல் திட்டமிட்டது. ஜஸ்டிஸ் கட்சியினர், ஆங்கிலேயருக்கு மனுக் கொடுத்து பிரச்சினையைச் சமாளிக்க முயன்றனர். பயனில்லை. 4500 தொழிலாளர்கள் ஆட்குறைப்பின் பெயரால் பழிவாங்கப்பட்டனர். தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கினர்.

ம. சிங்காரவேலர் உள்ளிட்ட 18 பேர் மீது சதிவழக்கு, போடப்பட்டது.

இப்போராட்டம், தஞ்சையின் உழைக்கும் விவசாயிகளிடையே யும் இடது சாரி தேசபக்தர்களிடையேயும் புதிய முத்திரையைப் பதித்தது.

அந்த முத்திரை - 'ஏகாதிபத்தியம் மற்றும் நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு சோஷலிஸ முத்திரை' ஆகும்.

1928 முதல் 1942 வரை தஞ்சை மாவட்டத்தில் 'சுயமரியாதைச் சமதர்ம இயக்கம்' தீவிரம் அடைந்தது. இதனை முனைப் பாக்கியவர் ப.ஜீவானாந்தம். இந்த இயக்கத்தின் மைய முழக்கங்கள்; "மத எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, ஜமீன் ஒழிப்பு, முதலாளித்துவ - நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு!"

'ருஷ்யப் புரட்சி'யை விளக்கி சோஷலிஸப் பிரச்சாரம் செய்தனர் சிங்காரவேலரும் ஜீவானந்தமும். இந்த இயக்கத்தின் பலனால் ஜஸ்டிஸ் கட்சி எளிய மக்களிடமிருந்து தனிமைப் பட்டது.

ரகசியமாக இயங்கிக் கொண்டிருந்த கம்யூனிஸ்டுகள் 'காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி'யை உருவாக்கி, அதில் செயல்பட்டு வந்தனர்.

காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் அதிகார பூர்வ தமிழ் வார ஏடாக 1937 நவம்பரிலிருந்து 'ஜனசக்தி' வெளிவரத் தொடங்கியது; ஆசிரியர் - ப. ஜீவானந்தம்.

தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டம் அரசியல் களமாக மாறிக் கொண்டிருந்ததால், கம்யூனிஸ்ட் இயக்கத்தை வளப்படுத்த, வழி காட்ட கேரளம் கண்ணனூரிலிருந்து நெடுங்காடி ராமச்சந்திரனை, அகில இந்திய மையம் அனுப்பி வைத்தது. தலை மறைவு வாழ்க்கையிருந்த மலபார் ஏ.கே.கோபாலனும் தஞ்சை வந்து சேர்ந்தார்.

மாவட்டத்தில் விவசாய சங்கங்களை ஏற்படுத்தும் பணியில் தமிழ்மாநில காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் கூட்டுக் காரியதரிசி பி. சீனிவாச ராவ் ஈடுபடுத்தப்பட்டார்.

"பி. எஸ். ஆர்" என்று விவசாயிகளால் அன்புடன் அழைக்கப்பட் பி. சீனிவாசராவ், இப்போது கர்நாடக மாநிலத்தில் உள்ள படகராவில் பிறந்தவர்.

பிராமண குலத்தில், நிலப்பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்த திருமதி கே. மணியம்மாள் மற்றும் சபாபதி முதலியார், டி. என். ராமச்சந்திரன் போன்றோர் துணையோடு 1938 முதல் விவசாய சங்கப் போராட்டங்களை பி. சீனிவாசராவ் தஞ்சை மாவட்டத்தில் நடத்தத் தொடங்கினார்.

ஹைதராபாத் நகரைத் தலைமையிடமாகக் கொண்ட உத்ராபதி மடத்திற்குச் சொந்தமான இரண்டாயிரம் ஏக்கர் நன்செய் புன்செய் நிலமுள்ள கிராமம் - தென்பரை. அனைத்து நிலமும் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது.

'தென்பரை குத்தகை சாகுபடி விவசாயிகள் இயக்கம்' கம்யூனிஸ்டுகள் தலைமையில் இயங்கிவந்தது. மிகமோசமான சுரண்டலுக்கும் அடக்கு முறைக்கும் ஆளாகிக் கொண்டிருந்த விவசாயிகள் 1943 ஜனவரிமுதல் போராடத் தொடங்கினர்.

தென்பரை விவசாயிகளின் பேரணி 1943 மார்ச் மாதத்தில் மன்னார்குடி நகர் நோக்கிப் புறப்பட்டது. விவசாயிகளான ஆண்களும் பெண்களும் செங்கொடிகளை ஏந்தி, பத்து மைல் தூரம் நடைப் பயணமாக வந்தனர்.

"மடாதிபதி அட்டூழியம் - ஒழிக!"

"நிலப்பிரபுத்துவ அட்டூழியம் - ஒழிக!"

"குத்தகையைக் குறை! கூலியை உயர்த்து!"

"விவசாயிகளே ஒன்று சேருங்கள்!"

— வழி நெடுக விண் அதிரும் முழக்கங்கள்.

மன்னார்குடி நகருக்குள் செங்கொடி ஊர்வலத்தை அனுமதிக்க மறுத்த போலீஸ், விவசாயிகளது எழுச்சி கண்டு பணிந்தது.

மகஜரை வாங்கிக்கொள்ள மறுத்த மாவட்ட கலெக்டர், அதை வாங்கிக் கொண்டு, விவசாயிகளோடு பேச மறுத்தார்.

உறுதி மிக்க தொடர் போராட்டம் இறுதியில் வென்றது. 15-7-1943-ல் விவசாயிகளின் வெற்றி ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

இந்த வெற்றி மன்னார்குடியிலும் அதன் பிற பகுதிகளிலும் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கை உயர்த்தியது.

அப்போது, கல்யாணசுந்தரத்துக்கு 13 வயது.

'தமிழ்நாடு விவசாயிகள் சங்க'த்தின் முதல் மாநாடு மன்னார்குடி நகரில் 1944மே 3,4 தேதிகளில் நடைபெற்றது. மாநாட்டின் சிறப்பு அம்சமாக, இந்தியாவின் வடகோடியில் உள்ள வங்கத்தில் ஏற்பட்டிருந்த கொடிய பஞ்சத்தின் கோரக் காட்சிகளை விளக்கும் புகைப்பட, ஓவியக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

ஆவுடையார் கோயிலிலிருந்து அறந்தாங்கி, பட்டுக் கோட்டை வழியாக, நான்கு நாட்கள் விவசாயிகள் அந்த மாநாட்டிற்கு நடந்தே வந்தனர்.

மாநாட்டின் எழுச்சி கண்டு நிலப்பிரபுக்கள் மிரண்டனர். "விவசாயத் தொழிலாளிகளான தலித்துகள் குளத்தில் குடிநீர் எடுக்கக் கூடாது!", "தலித்துகளுக்கு கடைகளில் பொருட்கள் விற்பனை செய்யக் கூடாது!" என்று ஒடுக்குமுறை ஏவப்பட்டது.

நெல் திருடியதாகவும் கலகம் செய்ததாகவும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலித்துகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடி கம்யூனிஸ்டுகள் வென்றனர்.

ஆனாலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நிலப் பிரபுக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு, கம்யூனிஸ்ட் தலைவர்களான மணலி கந்தசாமி முதலானோரை தஞ்சை மாவட்டத்திலிருந்து வெளியேறும்படி உத்தரவிட்டனர்.

அப்போதைய ராமநாதபுரம் மாவட்டம் வத்திராயிருப்பு என்னும் சிறுநகரில், 1945 ஜூனில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மூன்றாவது மாநாட்டில் முன்வைத்த முழக்கம். "குத்தகை விவசாயிகளுக்கு 50 சதவிகித வாரம்!"

இந்த முழக்கத்தின் அடிப்படையில் தஞ்சை மாவட்டத்தில் கோனேரிராஜபுரத்தை மையமாகக் கொண்டு, வார விவசாயிகளின் போராட்டம் தொடங்கியது. அந்தப் போராட்டம் மல்லபுரம், வயலூர், திருமலைராஜபுரம், வடகரை, மேலூர் முதலிய 32 கிராமங்களில் பரவியது. 1946 சாகுபடி காலத்தில் நிலப்பிரபுக்கள் நிலத்தை வார விவசாயிகளிடம் தராமல், 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தையும் வெளியாட்கள் மூலம் தாங்களே பயிர் செய்வது என முடிவு செய்து ஆட்சியாளர்களிடம் உதவி கோரினார்கள். ஆயுதப் போலீஸ் படை போராட்டப் பகுதிகளில் குவிந்தது.

இப்போதும் விவசாயிகளின் உறுதிமிக்கப் போராட்டமே வெற்றி பெற்றது.

1947 ஆகஸ்ட் 15

இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்றது.

அப்போது, பி.டி. ரணதிவேயின் வழிகாட்டலில் இயங்கி வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திரத்தை "போலி சுதந்திரம்" என்று தவறாக வர்ணித்தது. அப்போதைய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு (பொலிட் பீரோ) "ஏகாதிபத்திய - பூர்ஷுவா - நிலப்பிரபுத்துவ கூட்டமைப்பிற்குத் தலைமை தாங்குகிற இந்த பூர்ஷுவா அரசைத் தூக்கியெறிதல்" என்னும் திட்டத்தை அறிவித்து; "பூர்ஷுவாக்களைத் தனிமைப் படுத்தவும், அவர்களது எதிர்ப்பை பலாத்காரமாக எதிர்த்து முறியடிக்கவும் பாட்டாளி வர்க்கம் விவசாயத் தொழிலாளர்களுடனும் ஏழை விவசாயிகளுடனும் நடுத்தர விவசாயிகளுடனும் அணிசேர்ந்து மக்கள் ஜனநாயகப் புரட்சியைத் தோற்றுவிக்க வேண்டும்!" என்று வழிகாட்டியது. 1948 பிப்ரவரியில் கல்கத்தா நகரில் நடந்து முடிந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாட்டில் எடுக்கப்பட்ட இந்த தவறான முடிவால், கம்யூனிஸ்ட் கட்சி தலைமறைவாக இயங்க வேண்டிவந்தது. மாவட்டம் முழுவதும் தடை உத்தரவு போடப்பட்டது.

நிலப்பிரபுக்கள், குண்டர்கள் துணையோடு விவசாயிகள் மீது தாக்குதலைத் தொடங்கினர். விவசாயத் தொழிலாளிகளான தலித்துகளின் குடிசைகள் இடித்து நொறுக்கப்பட்டன. 1949 பிப்ரவரியில் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டது.

கல்யாணசுந்தரத்தின் சொந்தக் கிராமமான செங்கப்படுத்தான் காட்டிலேயே கம்யூனிஸ்ட் கட்சி சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. கட்சிக் கூட்டங்களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் பாட்டுக்கட்டிப் பாடுவது கல்யாணசுந்தரத்தின் கட்சிப் பணி.

ஒரே ஒரு பாடல் மட்டும் கல்யாணசுந்தரத்தின் மனதுக்குள்ளாக வினா எழுப்பிக்கொண்டேயிருந்தது.

"தேனாறு பாயுது! செங்கதிர் சாயுது! ஆனாலும் மக்கள் வயிறு காயுது?"

□ □ □

முதல் படையெடுப்பு...

ஒரே குடும்பத்தில் இரண்டு கலைஞர்கள். அண்ணன் கணபதி பாடல் இயற்றுவார்; படம் வரைவார்.

தம்பி கல்யாணசுந்தரம் பாடல் எழுதுவார், பாடுவார்; மேடை நடிப்பிலும் ஆர்வம் மிக்கவர்.

இருவருக்குமே கனவுகள்; கலைக் கனவுகள்! செங்கப்படுத்தான் காட்டிலே வாழ்ந்து கொண்டிருந்தால் "கனவு மெய்ப்படாது" என இருவருமே கருதினர்.

செங்கப்படுத்தான் காட்டிலிருந்தால் சிகரங்களைத் தொடுவது எப்படி?

சென்னையை நோக்கி சகோதரர்கள். புறப்பட்டனர்; சினிமாத் துறையில் பரிச்சயமுள்ளவரான பட்டுக்கோட்டை அய்யர் ஒருவர் கொடுத்த பரிந்துரைக் கடிதம் அவர்களிடம்!

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இறங்கிய சகோதரர்களுக்கு உறங்க நிழல் கிடைக்கவில்லை.

பட்டணத்தில் பரபரப்பு, பதட்டம், தீ வைப்பு, கலவரச் சூழ்நிலை; மகாத்மா காந்திஜி படுகொலை இந்தியாவையே குலுக்கிக் கொண்டிருந்தது; சென்னை நகரம் இந்திய நாட்டில் தான் இருந்தது!

அண்ணனும் தம்பியும் தங்கள் செங்கப்படுத்தான்காட்டுக்கே திரும்பினார்கள்.

ஒரு காலத்தில் அருணாசலக் கவிராயர் குடும்பம் 'ஓகோ' வென்று வாழ்ந்தது; இலங்கையிலிருந்து திரும்பிய பின்னர் வசதி குறைந்தது, வறுமை வாசலுக்குள் நுழைய காத்திருந்தது.

அந்தக் கிராமத்தில் அப்போது பி.ரத்தினம் குடும்பம் தான் வசதியோடு வாழ்ந்து கொண்டிருந்தது. கல்யாணசுந்தரத்துக்கு அண்ணன் முறையுள்ள ரத்தினம் சுயமரியாதை இயக்கம் வழியாக கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்தவர். அவரால் இயன்ற உதவிகளை கல்யாணசுந்தரத்திற்குச் செய்வார்.

குடும்பத்தின் வறுமை நிலையைக் கருதித் தான் கணபதியும் கல்யாணமும் சினிமாவில் நுழைய சென்னைக்குப் படை யெடுத்தார்கள். முதல் படையெடுப்பு தோல்வி.

கையிலிருந்த சித்திரக் கலையோடு அண்ணன் கணபதி தூர கிழக்கு நாடுகளில் ஒன்றான பினாங்குக்குப் போனார்.

ஊரில் இருந்த நாட்களில் கல்யாணசுந்தரம் கட்சிப் பணிகளில் மீண்டும் ஈடுபாடு காட்டினார். கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்ததால் பொதுக் கூட்டங்களோ கலா நிகழ்ச்சிகளோ நடக்காது. எனவே, பாடுகிற வேலை இல்லை. தலைமறைவு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த தலைவர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் கொண்டு போகிற வேலை; அவர்கள் கொடுக்கிற ரகசியக் கடிதங்களை உரியவர்களிடம் கொண்டு சேர்க்கிற வேலை.

கடிதங்களில் பல முக்கியமான வேலைத் திட்டங்கள். அவற்றை, உரியவர்களைத் தேடிப் பிடித்து ஒப்படைக்கின்ற வரையில் தன்னுடைய வீட்டில் பதுக்கி வைத்திருப்பார் கல்யாணசுந்தரம்.

அப்பா அருணாசலக் கவியாருக்கு இது தெரியும்.

ஒரு நாள் செங்கப்படுத்தான்காட்டை போலீஸார் திடீரென முற்றுகையிட்டனர். வீடு வீடாகச் சோதனை செய்தார்கள். கல்யாணசுந்தரம் வீட்டில் இல்லை. அவர் பதுக்கி வைத்திருந்த அத்தனை ரகசியக் கடிதங்களையும் அள்ளி, அப்பா அருணாசலம் அருகில் இருந்த குளத்தின் கரையில் குழிதோண்டிப் புதைத்தார்.

அவர் அப்படிச் செய்யாமல் இருந்திருந்தால் பி.ரத்தினம், கல்யாணசுந்தரம் உள்ளிட்ட பலர் பிடிபட்டிருப்பார்கள்; அல்லது தப்பியோட முயற்சித்துப் போலீஸாரால் சுட்டுக் கொல்லப் பட்டிருப்பார்கள்.

தடை செய்யப்பட்டிருந்ததால், தலைமறைவில் இருந்த கம்யூனிஸ்ட்டுகள், ஜாம்பவானோடை சிவராமன், வாட்டாக்குடி இரணியன், ஆம்பலாப்பட்டு ஆறுமுகம், கோட்டூர் ராஜு மாவட்டப் போலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். மணலி கந்தசாமி தலைக்கு விலை நிர்ணயம் செய்து தண்டோரா போடப்பட்டது.

தனது சொந்த அனுபவத்தாலும், சர்வ தேச கம்யூனிஸ இயக்கப் படிப்பினையாலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியத் தலைமை தனது 'தீவிர இடதுசாரி' (செக்டேரியன்) தவறைத் திருத்திக் கொண்டு 1951-ம் ஆண்டில் புதிய நடை முறையை ஏற்று அறிவித்தது.

1952-ல் இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல். தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக தஞ்சாவூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி வட்டாரங்களில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உற்சாகமாகப் பாட்டுப்பாடி வோட்டுக் கேட்டார் கல்யாணசுந்தரம்.

பினாங்குப் போயிருந்த அண்ணன் கணபதி தம்பிக்குப் பணம் அனுப்பினார்.

அவ்வளவுதான், தம்பிக்குக் கலையார்வம் மீண்டும் பீறிட்டது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு அறிமுகக் கடிதங்களை பட்டுக்கோட்டை அழகிரி, அணைக்கட்டு டேவிட் ஆகிய திராவிடரியக்கப் பிரமுகர்களிடம் வாங்கிக் கொடுத்தார் பி.ரத்தினம்

தஞ்சாவூர்க்கார நடிகர் டி.எஸ்.துரைராஜ் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களில் நடித்துக் கொண்டிருந்தார்....

□ □ □

சேலத்திலிருந்து மதுரை...
மதுரையிலிருந்து விழுப்புரம்...
விழுப்புரத்திலிருந்து பாண்டிச்சேரி !

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் படப் பிடிப்புக் கூடத்தில் டி.எஸ்.துரைராஜின் முன் நின்றார் கல்யாணசுந்தரம்.

''நடிப்பதற்கு எனக்கும் சான்ஸ் வாங்கிக் கொடுங்க!'' — கல்யாணசுந்தரம்.

''இப்போ சினிமா சான்ஸ் எதுவும் இல்லை! என்னை மாதிரி நடிகங்க சின்ன வயசில் வீட்டை விட்டு ஓடிவந்து நாடகங்களில் நடிச்சி பயிற்சி பெற்று சினிமாவுக்கு வந்தோம்! நீ முதலில் நாடகங்களில் நடி! அப்புறம் சினிமாவுக்குவா!'' டி.எஸ். துரைராஜ்.

கிருஷ்ணசாமியின் 'சக்தி நாடக சபா' மதுரையில் நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்தது. சிபாரிசு கடிதம் எழுதி கல்யாணசுந்தரத்திடம் கொடுத்தனுப்பினார் துரைராஜ்.

ஆரம்பத்தில் வேஷம் கொடுக்கப்படவில்லை. முதலில் உள் வேலைகள்.

அப்புறம், சின்னச் சின்ன வேஷங்கள்...

அடுத்து, பெயர் சொல்லக் கூடிய கதாபாத்திரங்கள்.

உயரமான உருவம் படைத்த கல்யாணசுந்தரத்துக்கு ஒரு நாள் திடீர் அதிர்ஷ்டம்...

'சக்தி நாடக சபா'வின் முதல் நாடகம் கவிஞர் எஸ்.டி.சுந்தரம் எழுதிய 'கவியின் கனவு'. அதில் மிக முக்கியமான கதாபாத்திரம் சர்வாதிகாரி ராஜகுரு. அந்த நாடகத்தின் அரங்கேற்றம் முதல் சர்வாதிகாரி ராஜகுருவாக நடித்துப் புகழ் பெற்றவர் எம்.என்.நம்பியார். 'கவியின் கனவு' கோயமுத்தூர் நகரில் நடந்த போது நம்பியாரை சினிமா உலகம் இழுத்துக்கொண்டது.

நம்பியார் இல்லாமல் 'கவியின் கனவு' நாடகத்தை நடத்தினால் வெற்றி பெறாது என்று நினைத்திருந்த சக்தி நாடக சபையினர், உயரமாகவும் கம்பீரமாகவும் நடமாடிக் கொண்டிருந்த கல்யாணசுந்தரத்தைக் கண்டனர். 'கவியின் கனவு' நாடகச் சுவடியைக் கொடுத்து, சில பகுதிகளை நடித்துக் காட்டச் சொன்னார்கள் ...

நடித்துக் காட்டினார் கல்யாணசுந்தரம். "சபாஷ்! பலே பேஷ்!" - சக்தி நாடக சபையினர் உற்சாகமாகக் கூவினர் கல்யாணசுந்தரம் நடிப்பைக் கண்டு! அப்போது அவரது பெயர் - ஏ.கே.சுந்தரம்.

அவர்களுக்கு புது ராஜ குரு கிடைத்து விட்டார்; அவர் - கல்யாணசுந்தரம்! ஏ.கே.சுந்தரம் !.

'ராஜகுரு சுந்தரம்' என்றே அழைக்கப்படலானார்.

பினாங்கிலிருந்து அண்ணன் கணபதி ஊர் திரும்பியிருந்தார்.

"சக்தி நாடக சபை விழுப்புரத்தில் முகாமிட்டிருக்கிறது. கவியின் கனவு நாடகத்தில் மிக முக்கியமான ராஜ குரு வேஷத்தில் நான் நடிக்கிறேன். நீங்கள் பார்க்க வரவேண்டும். வரும்போது எது கொண்டு வந்தாலும் ஆயிரத்துக்குக் குறையாமல் கொண்டு வாருங்கள்!" - அண்ணனுக்குத் தம்பி கடிதம் எழுதினார்.

காரணம் இல்லாமல் தம்பி எழுதமாட்டானே? அண்ணன் யோசித்தார்.

'சரி, நமது சக்திக்கு, அரிசியில் 1000 சீடை உருண்டைகள்! அதே மாவில் 100 முறுக்குகள்!' கொண்டு போனார். நாடகக் குழுவில் ஏகப்பட்ட கும்பல் - ஏகப்பட்ட பசி.

அடுத்த முகாம் பாண்டிச்சேரி.

கல்யாணசுந்தரம் உள்ளத்தில் சிலிர்ப்பு, உடலில் புல்லரிப்பு.

பாண்டிச்சேரி! தனது மானசீக குரு பாரதிதாசன் பிறந்து வளர்ந்து கவிபாடிக் கொண்டிருக்கும் கடலோர நகரம் ...

அண்ணன் கணபதியிடம் பாரதிதாசனின் புதிய படமொன்றை வரைந்து தரச் சொல்லி, வாங்கி வைத்துக் கொண்டார் கல்யாணசுந்தரம்.

□ □ □

பாரதிதாசனும் 'அகல்யா'வும் !

எல்லா முகாம்களில் நடந்தது போலவே, பாண்டிச்சேரியிலும், நடிகர்களே தங்களது நாடகங்களின் சுவரொட்டிகளை ஒட்டினார்கள்.

முதலில் 'கவியின் கனவு' நாடகம்.

ராஜகுருவாக எம்.என்.நம்பியார் நடித்த 'கவியின் கனவு' நாடகத்தைப் பார்த்து ரசித்திருந்த மன்னர்மன்னன் முதல் நாளே வந்து முன் வரிசையில் அமர்ந்தார்.

இடைவேளையில் ஒப்பனை அறைக்குள் நுழைந்தார் மன்னர்மன்னன்.

"நம்பியார் இல்லாத குறையே தெரியவில்லை! நன்றாக நடித்தீர்களே!"

"நீங்கள்?"

"புரட்சி கவிஞர் பாரதிதாசனின் மகன் மன்னர்மன்னன்!"

"நான் புரட்சிக் கவிஞரைப் பார்ப்பதற்காக அணைக்கட்டு டேவிட்டின் கடிதம் கொண்டு வந்திருக்கிறேன்!"

"வாருங்கள்!"

சக்தி கிருஷ்ணசாமிக்கு சினிமாவுக்கு வசனம் எழுத வாய்ப்புக் கிடைத்ததால் சென்னைக்குப் போய்விட்டார். ஏற்கனவே நட்டத்தில் நடந்து கொண்டிருந்ததால் மேனேஜர் சிவானந்தம் நாடக சபாவைக் கலைத்துவிட்டார்.

வேளாளர் வீதியிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்குச் சென்றார் கல்யாணசுந்தரம்; புதுவை விடுதலை வீரரும் கம்யூனிஸ்ட் தலைவருமான வ.சுப்பையாவைச் சந்தித்து, பட்டுக்கோட்டை அழகிரியின் கடிதத்தைக் கொடுத்தார்.

"இக் கடிதம் கொண்டுவரும் பையனின் பெயர் கல்யாணசுந்தரம். நன்றாகக் கவிதை எழுதக் கூடியவன். கம்யூனிஸ இயக்கத்தில் ஈடுபாடு உடையவன். பாரதிதாசனிடத்தில் இவனை உதவியாளனாகச் சேர்த்துவிடுங்கள்!" - என்று, பட்டுக்கோட்டை அழகிரி, வ. சுப்பையாவுக்கு எழுதியிருந்தார்.

கட்சித் தொண்டர் ஒருவருடன் பாரதிதாசனிடம் பையனை அனுப்பிவைத்தார் சுப்பையா.

அணைக்கட்டு டேவிட்டின் கடிதம், அழகிரியின் கடிதம், அண்ணன் கணபதி வரைந்த ஓவியம், 12 மாம்பழங்களுடன் பாரதிதாசனிடம் போய்ச் சேர்ந்தார் கல்யாணசுந்தரம்.

உணர்ச்சிப் பெருக்கோடு கல்யாணசுந்தரத்தைத் தழுவி அணைத்துக் கொண்டார் பாரதிதாசன்.

"நான் எழுதுகிற பாடல்களைப் படி எடுப்பதும் 'குயில' ஏட்டைப் பார்த்துக் கொள்வதும் உனது பணிகள்! சம்மதம் தானே?"

பெறற்கரிய பெரும் பாக்கியமாகக் கருதினார் கல்யாணசுந்தரம்! பகல் முழுவதும் பாரதிதாசன் இல்லத்தில் பணி. இரவில் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் படுக்கை.

ஒருநாள் தனது மாணவர்களை உற்சாகமாகக் கூவி அழைத்தார் பாரதிதாசன். "ஏய் ஆம்பிளைப் பசங்களா! நீங்களும் தான் கவிதை எழுதுறீர்கள்! இதைப் பாருங்க.. அகல்யா என்னும் பெண்ணொருத்தி பிரமாதமா பாட்டு எழுதியிருக்கா பாருங்க!" என்று, அஞ்சலில் வந்த கவிதையை வாசித்துக் காட்டினார்.

கல்யாணசுந்தரத்துக்கு மனதுக்குள் மகிழ்ச்சி. அந்த 'அகல்யா' யாரென்பது அவருக்கு மட்டுமே தெரியும்!

'அ. கல்யா'ணசுந்தரம். நடுவில் புள்ளியையும் கடைசி ஐந்து எழுத்துக்களையும் நீக்கிவிட்டால்? 'அகல்யா'!

மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில் 'பொன்முடி' மற்றும் 'வளையாபதி' படங்களின் திரைக்கதை - உரையாடல்கள் எழுதும் பணிகளில் ஈடுபட்டிருந்த பாரதிதாசன் அடிக்கடி சேலத்துக்குச் சென்று விடுவார்; சிலமுறை கல்யாணசுந்தரத்தையும் அழைத்து செல்வார்.

□ □ □

மீண்டும் சென்னைக்கு...

சென்னை, ராயப்பேட்டை பொன்னுசாமி நாயக்கர் தெரு 10-ம் நம்பர் வீடு. முன்புறத்தில் ஒரு சிறிய அறை. மாதம் ரூபாய் பத்து வாடகை. அதற்குள் கல்யாணசுந்தரம், அவரது நண்பர்கள் ஓவியர் ராமச்சந்திரன், நடிகர் ஓ.ஏ.கே. தேவர்.

தேவரும் கல்யாணசுந்தரமும் நெடு நெடு உயரமானவர்கள். நீட்டிப் படுத்தார்களானால் கால்கள் அறைக்கு வெளியே நீளும்.

நேரம் கிடைக்கிற போதெல்லாம், கல்யாணசுந்தரம் கவிதைகளை எழுதி எழுதிக் குவித்தார். காகிதத்தை எடுப்பார். பிள்ளையார் சுழி ("உ") எழுதுவார். அதன் கீழே "வாழ்க பாரதிதாசன்" என்று மறக்காமல் எழுதுவார்.

இந்த வாடிக்கையை கல்யாணசுந்தரம் மறந்ததே இல்லை!

பொன்னுசாமி நாயக்கர் தெருவில் இன்னொரு அறையில் நடிகர் நம்பிராஜனும் அவரது தம்பி பாலகிருஷ்ணனும் தங்கியிருந்தனர்.

சியாமளா பிக்சர்ஸ் மற்றும் நளினி பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பில் 'படித்தபெண்' என்னும் படத்தை உருவாக்கத் திட்டமிட்டிருந்த பட அதிபரிடம் கல்யாணசுந்தரத்தை "சிறந்த பாடலாசியர்" என்று அறிமுகப்படுத்தி வைத்தார் நடிகர் நம்பிராஜன்.

படாதிபதி பரம பக்தர். பரம கருமி.

கிராமத்தான் போலிருந்த கல்யாணசுந்தரத்தை ஏற இறங்கப் பார்த்தார் தயாரிப்பாளர். கதையை சொன்னார் - "அவள் படித்த பெண். ஆனால், அதற்குத் தகுந்த குணங்கள் கொண்டவள் அல்ல. படித்தவர்கள் பண்புடன் நடந்து கொள்ளமாட்டார்கள் என்பதற்குச் சான்று போலிருக்கிறாள் அந்தப் பெண். கணவன் அவனுக்கு அலட்சியம். அவளுக்கு நேர் விரோதமான ஒரு பெண்ணும இக்கதையில் இருக்கிறாள்; அவள் மிகவும் நல்லவள்; குணவதி. இவளுடைய கணவனோ இவளுக்கு நேர் விரோதம். மனைவியைக் கொடுமைப்படுத்துகிறான்."

படத்தின் கதை, கல்யாணசுந்தரத்துக்கு பிடித்ததோ இல்லையோ, பட அதிபர் சொன்ன இரண்டு சூழ்நிலைகளுக்கு ஏறப இரு பாடல்கள் எழுத ஒப்புக் கொண்டார்.

ஒன்று : காதல் பாடல்

இன்னொன்று : போட்டோகிராபர் ஒருவர் தன் தொழிலைப் போற்றிப் பாடும் பாடல்.

பாடல் ஒன்றுக்கு ரூபாய் 150/- நிர்ணயிக்கப்பட்டது.

1954-ல் எழுதப்பட்ட இவ்விரு பாடல்கள் தான் கல்யாணசுந்தரம் திரைப் படத்திற்கென எழுதிய முதல் இரு பாடல்கள் - ஒப்புக்கொண்ட மறுநாளே எழுதிக் கொடுத்தார் கல்யாணசுந்தரம். ஒப்புக்கொண்ட சன்மானத்தை தயாரிப்பாளர் கொடுத்தனுப்ப வில்லை.

ஒரு நாள், தேனீர் அருந்த, ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் அருகிலுள்ள அமீன் ஓட்டலுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தார் கல்யாணசுந்தரம்.

அவர், எண்ணற்ற பாடல்களை எழுதி வைத்திருந்த நோட்டுக்களையும் தனித்தனி காகிதங்களையும் பழைய பேப்பர்க்காரனிடம் மூன்று ரூபாய்க்கு நிறுத்துப்போட்டு, மதிய உணவுக்கு உத்தரவாதம் செய்து விட்டதாக மகிழ்ச்சியோடு சொன்னார் ஓ.ஏ.கே. தேவர்.

இடிந்து போனார் கல்யாணசுந்தரம்.

'படித்த பெண்' படமுதலாளியைத் தேடிப்போனார். அவர் வீட்டுக்கு வெளியிலேயே உட்கார்ந்திருந்தார்.

"என் பாடல்களுக்குரிய தொகையைத் தாங்கோ!" என்றார் கல்யாணசுந்தரம்.

காதில் வாங்கிக் கொள்ளாமல், அலட்சியமாக, தயாரிப்பாளர், வீட்டுக்குள் போனார்; பின் தொடர்ந்தார் கல்யாணசுந்தரம்.

"வீட்டுக்குள்ளேயே வர்றீயே! வெளியிலேயே நில்லு!" என்றார் தயாரிப்பாளர்.

கொதிப்படைந்து போன கல்யாணசுந்தரம் காகிதமொன்றை எடுத்து-

தாயால் வளர்ந்தேன்
தமிழால் அறிவு பெற்றேன்
நாயே நேற்றுன்னை
நடுத்தெருவில் சந்தித்தேன்
நீயார் என்னை
நில்லென்று சொல்ல ?

— என்றெழுதி, கதவிடுக்கில் சொருகி வைத்துவிட்டு, வெளியேறி விட்டார்.

படித்துப் பார்த்த படாதிபதி பதறிப்போனார். பரமபக்தர் அல்லவா ? "கவிஞன் அறம்பாடி விட்டானோ?" - என்று பயந்து போனார். கையிலிருந்த பணத்தை வேறொருவர் மூலம் கொடுத்தனுப்பினார்.

சிவாஜி கணேசனின் சிவாஜி நாடக மன்றமும் எஸ். வி. சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ் நாடகக்குழுவும் இணைந்து

நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தனர். சக்தி நாடக சபாவிலிருந்து வந்தவர்களை சேவா ஸ்டேஜில் சகஸ்ரநாமம் சேர்த்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டார் கல்யாணசுந்தரம்.

'பாடலாசிரியனாக வளரும் வரை மீண்டும் நாடகங்களில் நடிக்கலாமே ?'

சகஸ்ரநாமம் சேர்த்துக் கொட்டார்.

'வானவில்' நாடகத்தில், கவியுள்ளம் கொண்ட முதலமைச்சர் பாத்திரத்தில் கல்யாணசுந்தரம் நடித்தார். ராஜா ராணிக் கதை.

''இயற்கையாகவே கவியுள்ளம் கொண்டவரானதால், கல்யாணசுந்தரம் அந்தப் பாத்திரத்தை ரசித்து நடித்தார்'' என்று சகஸ்ரநாமம் பாராட்டினார்.

1953-ம் ஆண்டில், கல்யாணசுந்தரத்துக்கு நடிகர் டி.கே.பாலச்சந்திரனோடு நட்பு ஏற்பட்டது. ஓய்வு நேரங்களில் பாலச்சந்திரனைத் தேடிப்போவார்.

கேரள மக்கள் கலைக் குழுவினரின் 'நீங்கள் என்னை கம்யூஸ்ட்டாக்கி' என்னும் மலையாள நாடகத்தின் பாட்டுப் புத்தகத்தைப் பிரித்து பாடல்களை உரக்கப் படித்துக்கொண்டிருந்தார் பாலச்சந்திரன்.

அப்போது அங்கு வந்து சேர்ந்த கல்யாணசுந்தரம், "பாடுவதை ஏன் நிறுத்தி விட்டீங்க? பாடுங்கோ" என்றார். தனது கரகர குரலில் பாடினார் பாலச்சந்திரன்.

''எல்லாம் கிராமீயப் பாடல்கள். கம்யூனிஸ்ட் கவிஞர் ஓ.என்.வி.குரூப் எழுதியவை'' என்றார் பாலச்சந்திரன்.

அப்போது அவரோடிருந்த நடிகர் ஏ.வீரப்பன் "அண்ணே! நம்ம கலயாணசுந்தரமும் பாட்டெழுதுவார்!" என்றார்.

நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்த அந்த நண்பர்கள் "மக்கள் நாடக மன்றம்' என்னும் பெயரில் நாடகக்குழுவொன்றைத் தொடங்குவதென்ற முடிவோடு கலைந்து சென்றார்கள்.

நித்தியானந்தம் 'என்பவர் கதை, வசனம் எழுதினார், பாடல்களை கல்யாணசுந்தரம் எழுதினார்; நாடகத்தின் பெயர் - **'கண்ணின் மணிகள்'**

பாட்டெழுதுவதற்கு, கல்யாணசுந்தத்திற்கு தேவைப்படும் பக்க வாத்தியம் ஒரு பெட்டியின் ஓரம் அல்லது ஒரு பலகை அல்லது நெருப்புப்பெட்டி (தீப்பெட்டி)... அதிசயப்பட்டார் பாலச்சந்திரன்.

☐ ☐ ☐

"மக்கள் கவிஞர்"

1954 ஆகஸ்ட் முதல் தேதி, திண்டுக்கல் காந்தி மைதானத்தில் தமிழ்நாடு விவசாயசங்க மாநாட்டில், மக்கள் நாடக மன்றத்தின் "கண்ணின் மணிகள்' நாடகம் அரங்கேறியது

தன் ஆழ் மனதில் பதிந்திருந்த நெடுநாள் கவலையை இந்த நாடகத்தின் பாடலொன்றிலும் கல்யாணசுந்தரம் எதிரொலித்தார்-

ஆண் : கதிராடும் கழனியில்
சதிராடும் பெண்மணி !
கலை மேவும் அழகாலே
கவர்ந்தாய் கண்மணி!
முதிராத செடியே
முல்லை மலர்க் கொடியே!

பெண் : அன்பே என் ஆயிருரே
ஆணழகே என்னுடன்
தென்பாங்கு பாடும்
தீராத என் இன்பமே!

ஆண் : ஏரோட்டும் விவசாயி
எருதுகளை ஏரியிலே

பெண் : நீராட்டும் அழகைப் பாரு
கண்ணாலே!

ஆண் : பாராட்ட வேண்டியவர்
பானை தனைத் தலையில் வைத்துப்
பக்குவமா வாரா பாரு பின்னாலே!

பெண் : தேனாறு பாயுது!
செங்கதிரும் சாயுது!
ஆனாலும் மக்கள் வயிறு காயுது!

ஆண் : மானே இந்நாட்டிலே
வகையான மாறுதல்
வந்தாலன்றி ஏது சீருகள்?

இருவரும் : உழவனும் ஓயாத
உழைப்பும் போல நாமே
ஒன்றுபட்டு வாழ்க்கையிலே
என்றும் இருப்போம்!

நாடகத்திற்குத்திற்குத் தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம் இந்த பாடலையும் நாடகத்தில் இடம் பெற்றிருந்த

விவசாயிகள் பற்றிய இதர பாடல்களையும் வெகுவாகப் பாராட்டி "மக்கள் கவிஞருக்குரிய தர உயர்வு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்களில் ஒளி விடுகின்றன!" என்று பேசினார்.

திண்டுக்கல்லிருந்து மக்கள் நாடக மன்றத்தினர் சென்னை திரும்பியதும் கல்யாணசுந்தரததைப் பார்த்த பிரபல நடிகர் ஒருவர், "வாரும் அய்யா! மக்கள் கவிஞரே!" என்று கிண்டலான தொனியில் வரவேற்றார். கல்யாணசுந்தரம் புரிந்து கொண்டார்: "ஆமாம் நான் மக்கள் கவிஞனாகப் போகிறேன்! ஜீவாவே சொல்லிவிட்டார்".

ஏற்கனவே போராட்ட பூமியில் பிறந்து வளர்ந்த அனுபவம்; விவசாயக் குடும்பம்; 24 வயதுக்குள் மாடு மேய்ப்பவனாக, மாட்டு வியாபாரியாக, மாம்பழ, இட்லி, முறுக்கு விற்பவனாக, தேங்காய் - தென்னங்கீற்று வியாபாரியாக, மீன்-நண்டு பிடித்தொழிலாளியாக, உப்பளத் தொழிலாளியாக, மிஷின் டிரைவராக, தண்ணீர் வண்டிக்காரனாக வாழ்வின் அனுபவங்களைப் பெற்று, பாடகன் - நடனக்காரன் - அப்புறம் கவிஞன். திண்டுக்கல், விவசாய சங்க மாநாட்டு நாடக மேடையில் தலைவர் ஜீவானந்தத்தின் பாராட்டுரை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திற்கு ஊக்க மருந்தாயிற்று.

கலைஞர்களை, கவிஞர்களை உற்சாகப்படுத்துவதில் வல்லவர் - ப. ஜீவானந்தம். அவரைப் போலவே, அப்போது 'ஜனசக்தி'யில் பணியாற்றி வந்த ஐ. மாயாண்டி பாரதிக்கும் இளைஞர்களை உற்சாகப்படுத்தும் பண்பு இருந்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலத் தலைமை நிலையமும் அதன் வார ஏடு 'ஜனசக்தி' அலுவலகமும் ராயப்பேட்டை அந்தோணி தெருவில் இயங்கி வந்தன.

திண்டுக்கல் மாநாட்டுக்குப் பிறகு அதே பகுதியில் பொன்னுசாமி நாயக்கன் தெருவில் குடியிருந்த கல்யாணசுந்தரத்தைத் தேடிக் கண்டு பிடித்தார். ஐ.மாயாண்டி பாரதி; அடிக்கடி சந்தித்தார். அதன் பலன் -

புதிய ஒளி வீசுது பார்
இமயம் தாண்டிப்
புன்சிரிப்பு காட்டுது பார்
இன்பம் அங்கே
கதை புனைந்து கூறவில்லை
கண்ணில் தோன்றும்
காட்சியிவை ரஷ்யாவின்
மக்களாட்சி !

- என்று தொடங்கும் நவம்பர் புரட்சியைப் போற்றும் இப்பாடலை 'ஜனசக்தி'யின் மலருக்கு எழுதிக் கொடுத்தார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். ('ஜனசக்தி' 7-11-1954).

விவசாயியாக கல்யாணசுந்தரம் வாழ்ந்து கொண்டிருந்தபோது, ஒருநாள் வயலுக்கு நீர் பாய்ச்ச, கல்யாணசுந்தரம் சென்றார். அங்கே நின்று கொண்டிருந்த மிராசுதார் 'எங்க வயலுக்கு இப்போ தான் தண்ணீர் பாய்ச்ச ஆரம்பித்திருக்கோம். அது முடிஞ்ச பிறகு உன்னோட நிலத்துக்கு பாய்ச்சு!" என்றார்.

மறுநாள் காலை எழுந்ததும் வயலுக்குச் சென்ற கல்யாணசுந்தரம், தங்களுடைய நிலத்திலும் நீர் பாய்ந்திருப்பதைக் கண்டு திகைத்தார். 'யார் செய்த வேலை இது?'

வரப்பைப் பார்த்தார்.

நண்டு ஒன்று வளை தோண்டி, மிராசுதார் நிலத்தையும் அவரது வயலையும் நீரால் இணைந்திருந்தது. 'ஆகா! கவிதையாக்க வேண்டிய சம்பவம் இது! மனதில் பதிய வைத்துக் கொண்டார்.

நாகனும் வள்ளியும் கல்யாணசுந்தரத்தின் கற்பனைத் தம்பதிகள்; வள்ளி சொல்கிறாள் -

இருட்டும் முன்னே வீட்டுக்கு வந்துட்டேன்
பொழுது விடிஞ்சதும் போய்ப் பாத்தா
பொங்கித் ததும்புது நம்ப வயலும்!
வாய்க்காலும் வெட்டலே மனையும் திறக்கலே!
வழியும் அளவுக்கு தண்ணி ஏது?
நண்டு செஞ்ச தொண்டு மச்சான்!
நாட்டுநிலைமையை நல்லாப் பாத்தது
ஏற்றத்தாழ்வை ஒழிக்க வரப்பில்
போட்டது வளையைப் புரட்சி நண்டு!
பாய்ந்தது தண்ணீ பரவி எங்குமே
காய்ந்த பயிர்களும் கதிரைக் கக்கின
ஆகா! ஆகா ! அருமை நண்டே!"

- என்னும் பகுதிகள் அடங்கிய நீளமான "நண்டு செய்த தொண்டு" கவிதை தான், கல்யாண சுந்தரம் 'ஜனசக்தி'க்கு எழுதிய இரண்டாவது கவிதை (17-7-1955).

கல்யாணசுந்தரத்தின் அண்ணனும் ஓவியருமான கணபதியின் பெயரை 'கணபதி சுந்தரம்' என்று மாற்றினார் ப. ஜீவானந்தம்.

"கல்யாணசுந்தரம் என்பதே நீளமான பெயர். அத்தோடு பட்டுக்கோட்டையையும் சேர்த்து மிக நீளமானதாக ஆக்கிவிட்டீர்களே? கம்பன், வள்ளுவன், இளங்கோ என்று கவிஞர்களின் பெயர்கள் சுருக்கமாக இருப்பது போல், உங்கள் பெயரையும் சுருக்கிக் கொள்ளலாமே?" என்ற ஆலோசனைக்கு

கல்யாணசுந்தரம் சொன்ன பதில்: "அவர்கள் பெரிய மேதைகள்; பெரிய கவிஞர்கள்; அதனால் சின்னப் பெயர்களாக வைத்துக் கொண்டார்கள்! நான் சின்ன ஆள் தானே, பெரிய பெயராக இருக்கட்டுமே!"

எங்கும் விவசாய சங்கம் அமைத்ததில்
அங்கம் வகித்திடுவோம் - இந்தத்
தங்க முயற்சிக்கும் பங்கம் விளைத்திடும்
தன்மையை வெட்டி மிதித்திடுவோம்!
கங்குல் பகல் நின்று காடு திருத்திய
கைகள் உயர்த்திடுவோம்! - என்றும்
எங்கள் உழைப்பினை எங்களுக்கே என
எக்காளம் ஊதிக் கிளம்பிடுவோம்!

- இது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 'ஜனசக்தி'க்கு எழுதின மூன்றாவது பாடல் (16-10-1955)

ஒரு நாள் கல்யாணசுந்தரமும் நடிகர் டி.கே.பாலச்சந்திரனும் மைலாப்பூர் லஸ் கார்னரிலிருந்து 3-ம் நம்பர் சிட்டி பஸ்சில் ஏறினார்கள். வேகமாக வந்து கொண்டிருந்த பஸ், ஆழ்வார்ப்பேட்டைத் திருப்பத்திற்குப் பின் மெதுவாகச் செல்லத் தொடங்கியது.

சாலையை எட்டிப் பார்த்தார் கல்யாணசுந்தரம். "ரோட்டில் செங்கொடி பறக்குதே ஏன்?" எனக் கேட்டார்.

வெளியே பார்த்து விட்டு, பாலச்சந்திரன் சொனனார். "தண்ணீர் குழாய் பழுது பார்ப்பதற்காக பள்ளம தோன்டியிருப்பதால் பஸ் டிரைவருக்கு ஏற்றத்தாழ்வு பற்றி எச்சரிப்பதுக்காக சிவப்புப் கொடி நாட்டியிருக்காங்க!"

கல்யாணசுந்தரத்தின் கற்பனையில் கவிதை பிறந்தது -

ரோட்டில் பள்ளம் மேடு
எங்கும் பாருங்கள் மேட்டை!
ஆற்று மணல் காட்சி அங்கு பாருங்கள்!
போக்குவரத்தை எச்சரிக்க
செங்கொடி அங்கே காற்றிலாடப் பாருங்கள்!
பழுது பார்க்கும் தொழிலாளரைப் பாருங்கள்!
ஏற்றத் தாழ்வு இருக்குமிடம் எங்குமே
மாற்றம் காணவே பறக்கும் செங்கொடி!

□ □ □

புகழ் ஏணியில்...

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடன் சென்று வந்த அனுபவமோ, நடிகர் துரைராஜ் செய்து வைத்த அறிமுகமோ, வசன கர்த்தா ஏ.எல்.நாராயணன் சிபாரிசோ, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த 'மகேஸ்வரி' படத்திற்குப் பாடல்கள் எழுதும் வாய்ப்புப் பெற்றார் கல்யாணசுந்தரம்.

'கல்யாணசுந்தரம் பாடல்களுடன் வெளி வந்த முதல் படம்' என்னும் வரலாற்றைப் பெற்றுவிட்டது 'மகேஸ்வரி'. 1955 நவம்பர் 11-ம் நாள் வெளி வந்தது அப்படம்.

கல்யாணசுந்தரத்திற்கு ஐந்து பாடல்கள். ஒரு பாடலில் அவர் தன்னை அடையாளம் காட்டினார்; சில வரிகளில் -

சின்ன வீடு ராணி எங்க ராணி
சிங்காரத் தங்க நிறம் அவள் மேனி
கொள்ளைக்காரன் போலே
எல்லை தாண்டி வந்த
கொடியவரை அழிக்கும் கோப ராணி!

- என்று தொடங்கும் அந்தப் பாடலின் மைய முழக்கம் எனச் சில வரிகள் -

வாளெடுத்து விசுவா மானம் காக்க!
ஏழை மக்கள் பக்கம் பேசுவா துன்பம் தீர்க்க!

முதலில் வெளி வந்த படத்திலேயே ஐந்து பாடல்கள்; அத்தனையும் வெற்றிப் பாடல்கள் - தமிழகத்தின் புகழ் பெற்ற நிறுவனம் ஒன்றின் தயாரிப்பு. தமிழ்த் திரைப்பட வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய ஸ்ரீதரின் திரைக் கதை வசனம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்கிற புதிய கவிஞரை, ரசிகர்கள் தங்கள் இதயத்தில் பதிய வைத்துக் கொண்டனர்.

'மகேஸ்வரி' அல்லாமல் முதலில் ஒப்பந்தமான 'படித்த பெண்' முதலில் திரைக்கு வந்ததிருந்தால், கல்யாணசுந்தரத்தின் எதிர்காலம் கேள்விக் குறியாக மாறியிருக்கும். முதலில் ஒப்பந்தமான 'படித்த பெண்' 11-4-1956ல் தான் திரையைக் கண்டது; கல்யாணசுந்தரத்தின் இரண்டு பாடல்களும் பாராட்டும்படியாகத்தான் இருந்தன; ஆனால் பத்தாம்பசலிக் கதை; படுதோல்விப் படம்.

"முதல் வெற்றியே தொடர் வெற்றி" என்பது திரைப்படத் துறையின் தொழில் வர்த்தகர்கள் வகுத்துள்ள இலக்கணம்.

நல்லரும் வாய்ப்பாக, கல்யாணசுந்தரத்தின் முதல் படமாக 'மகேஸ்வரி' வெளிவந்தது.

'படித்த பெண்' வெளிவந்த 1956-ம் ஆண்டில் ஒன்பதாவது மாதத்தில் 'குலதெய்வம்' படத்தில் நான்கு பாடல்கள்.

மாடர்ன் தியேட்டர்ஸ் 'பாசவலை' படத்திற்கு இசையமைக்கச் சென்றிருந்த விஸ்வநாதன் - ராமமூர்த்தி இரட்டை இசையமைப்பளார்கள் எதிரே நின்றார் கல்யாணசுந்தரம்.

'பாசவலை' கதையும் பாடல்களுக்கான சூழ்நிலைகளும் விஸ்வநாதனுக்கு மனப்பாடம்; 'அத்தகைய பாடல்களை இந்தப் பையனால் எழுதுமுடியுமா? அவருக்குச் சந்தேகம்!

மாடர்ன் தியேர்ட்டஸ் மானேஜர் சுலைமானைக் கூப்பிட்டனுப்பினார்; "சுலைமான்! எங்களுக்கு ஏற்கனவே கைவசம் நிறையப்படங்கள் இருக்கு. பாசவலைக்காக சேலத்தில் ஆறே நாட்கள் தான் தங்கப் போறோம். மெட்ராசிலே நிறைய வேலை இருக்கு. இந்தப் படத்துக்கு கண்ணதாசனையோ மருதகாசியையோ எழுதச் சொல்லுங்கோ! புதுசா பாட்டெழுதறவங்களைப் பார்த்து எங்க நேரத்தை வீணடிக்க முடியாது!" என்றார் விஸ்வநாதன்.

மறுநாளும் கல்யாணசுந்தரத்துடனேயே வந்தார் சுலைமான்; "என்னங்க, இந்தப் பையன் நல்லாவே பாட்டெழுதியிருக்கான். படிச்சுப் பாருங்க, நல்லா இருந்தா பயன் படுத்துங்கோ! இல்லேன்னா பையனை நானே ஊருக்கு அனுப்பிடுறேன்"

குட்டி ஆடு தப்பி வந்தா
குள்ளநரிக்குச் சொந்தம்!
குள்ளநரி தப்பி வந்தா
கொறவனுக்குச் சொந்தம்!
தட்டுக்கெட்ட மனிதர் கண்ணில்
பட்டதெல்லாம் சொந்தம்!
சட்டப்படி பார்க்கப் போனா
எட்டடி தான் சொந்தம்!

கல்யாணசுந்தரத்தை உட்கார வைத்து பத்தே நிமிஷத்திலே அப்பாடலுக்கு 'டியூன்' போட்டார் விஸ்வநாதன்.

மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டூடியோ வளாகத்தில் பூஜை அறை ஒன்றுண்டு. அன்று மாலை அதற்குள் நுழைந்து கதவைச் சாத்திவிட்டு ஸ்வாமி படங்கள் முன்னால் நின்றார் விஸ்வநாதன். "ஆண்டவா! நான் எப்படிப்பட்ட தவறைச் செய்து விட்டேன்!" - சுவரில் மோதி அழுதார். தன்னைத்தானே திட்டித் தீர்த்தார்; "ஏண்டா, விஸ்வநாதன்! அதுக்குள்ள இவ்வளவு திமிர் வந்திடுச்சா

உனக்கு? அறிவுகெட்டவனே, நீ பெரிய ஆளுன்னு நினைப்பா? கவிதை எழுதிகிட்டு வந்தவனிடம் அதில என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்க முயற்சிக்காம அவனை திருப்பி அனுப்புற அளவுக்கு உனக்கு கொழுப்பா?''

அந்த இரவு, விஸ்வநாதன், உண்ணவுமில்லை, உறங்கவுமில்லை.

'பாசவலை' படத்தில் புதிதாக ஒரு நடிகையை அறிமுகப்படுத்த திட்டமிட்டிருந்தார் மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர். சுந்தரம். 'தான் விரும்பியும் தன்னை விரும்பாத மன்னனை நாயாக மாற்றி கயற்றில் கட்டிவைத்திருக்கும் அந்தக் கதாபாத்திரம் 'சூன்யக்காரி' பாடுவதாக ஒரு பாடல்.

கல்யாணசுந்தரம் எழுத்திக் கொடுத்தார். அதை எடுத்துக் கொண்டு விஸ்வநாதன்-ராமமூர்த்தி டி.ஆர். சுந்தரத்திடம் போனார்கள். 1937-ம் ஆண்டிலிருந்து தமிழ்ப்பட உலகில் தொழில் நடத்திக் கொண்டிருந்த டி.ஆர். சுந்தரம் மேல்நாட்டில் படித்தவராதலால் தமிழ் படிக்கத் தெரிந்தவராக இருந்தாலும், அவருக்குச் சரளமாக தமிழ் பேச வராது. கல்யாணசுந்தரம் எழுதிய பாடலைப் பார்த்து விட்டு டி.ஆர். சுந்தரம் சொன்னார்: "என்னா மேன், அந்தப் பட்டுக்கோட்டை பாட்டு எழுதுறான்? காவியமா எழுதுறான்? புதுசா ஒரு நடிகையை தான் பயன்படுத்துறேன். பட்டுக்கோட்டை பாட்டை வச்சுத்தான் அவள் பாப்புலராகணும்! வேற பாட்டு எழுதச் சொல்லுங்க!''

விஸ்வநாதன், கல்யாணசுந்தரத்திடம் விஷயத்தைச் சொன்னார்.

''அதாண்ணே! தமிழ் தெரியாத இந்த மாதிரி ஆளுங்களுக்கெல்லாம் பாட்டு எழுதுவது சரியல்ல! எனக்குப் பிடிக்காது'' - என்றார் கல்யாணசுந்தரம்.

"உங்களுக்கு சங்கீதம் தெரியுது. ஆனா, இங்கிதம் தெரியலே! வாங்க முதலாளியைப் பார்ப்போம். அவர் விரும்புற மாதிரி ஒரு பாட்டை எழுதிக் கொடுங்க'' என்று கூறிய விஸ்வநாதன், டி.ஆர். சுந்தரத்திடம் அழைத்துப் போனார்.

அவர் முதலில் சொன்னதையே கல்யாணசுந்தரத்திடமும் சொன்னார்.

அந்த அறையில் முதலாளிக்கு மட்டும் ஒரே ஒரு இருக்கை. எனவே, இசையமைப்பாளர்களான விஸ்வநாதன்-ராமமூர்த்தி, கவிஞர் கல்யாணசுந்தரம் நின்று கொண்டே பேச வேண்டியிருந்தது..

கல்யாணசுந்தரம் ஒரு காகிதம் கேட்டார்; வந்தது; எழுதி முதலாளி சுந்தரத்திடம் கொடுத்தார்; ''மரியாதை கொடுத்து, மரியாதை வாங்க வேண்டும்!''

முதலாளி சுந்தரம் மேலும் மூன்று நாற்காலிகள் போடச் சொன்னார். அவர் அறிமுகப்படுத்தவுள்ள புதுநடிகை ராஜாமணியின் எதிர்காலத்திற்கு உதவுமாறு பாடல் அமைய வேண்டும் என்ற வேண்டுகோளையே திரும்பவும் சொன்னார்.

கல்யாணசுந்தரம் முதலில் எழுதிக் கொடுத்து இசை அமைத்திருந்த-

மச்சான் உன்னைப் பாத்து
மயங்கிப் போனேன் நேத்து
மனசு வச்சா இன்பம் வரும்
பழைய நடையை மாத்து ! (மச்சான்)

முத்தாத கத்திரிச் செடி
கொத்தோடே பூத்த செடி
முத்துப் போல் சிரிச்சபடி
சுத்திச் சுழலும் சித்திரக்கிளி!
நான் தானய்யா - மலைத்
தேன் தானய்யா! - தடை
வேண்டாமய்யா - அய்யா! (மச்சான்)

கண்ணோடு கண்ணு பின்னி
எண்ணாத தெல்லாம் எண்ணி
தன்னந் தனி இருந்த கனி
இன்னமும் சொன்னா இளங்கன்னி!
நான் தானய்யா- மலைத்
தேன் தானய்யா! - தடை
வேண்டாமய்யா! - அய்யா! (மச்சான்)

— என்னும் பாடலின் முதல் இரு வரிகளாக ...

லொள் லொள் லொள்!
லொள் லொள் லொள்!

— சேர்த்துக் கொடுத்தார் கல்யாணசுந்தரம்; பாடிக் காட்டினார் விஸ்வநாதன்; "சபாஷ்!" என்று பாராட்டினார் படமுதலாளி டி.ஆர். சுந்தரம்.

சூன்யக்காரி வேடத்தில் நடித்த புது நடிகை குமாரி ராஜாமணி படத்தில் ஆடினார்; பத்திரிக்கைகளாலும் ரசிகர்களாலும் பாராட்டப்பட்டார்.

டி.ஆர். சுந்தரத்தின் கனவு பலித்தது. அந்தப் புதுநடிகை பின்னர் சில படங்களில் "லொள் லொள் ராஜாமணி" என்னும் அடைமொழியோடு கவர்ச்சி நடனங்கள் ஆடினார்.

1956 'பாச வலை' படம் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்துக்கு ரசிகர்களிடமும் திரை உலகத்தினரிடமும் புகழை பெற்றுத் தந்தது.

"பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்னு ஒரு புள்ளையாண்டான் எழுதின பாட்டைக் கேட்டீங்களா?" - என்று கவிஞர் தஞ்சை ராமய்யாதாஸ், உடுமலை நாராயண கவியிடம் கேட்டார்.

"நல்லாத் தானே எழுதுறான்! என்ன சமாச்சாரம்?" உடுமலை.

"சட்டப்படி பார்த்தா எட்டடிதான் சொந்தம்னு எழுதியிருக்கான். அதெப்படி! ஆடி அடங்கும் மனிதனுக்கு ஆறடி நிலம் தானே சொந்தம்?" தஞ்சை.

"இதிலென்ன கஞ்சத் தனம் வேண்டியிருக்குன்னு தாரளமா கூட ரெண்டடி இருக்கட்டுமேன்னு பாடி இருக்கான். நல்லது தானே! உனக்கும் எனக்கும் ஆறடி பத்தாதே!" - என்றார் உடுமலை நாராயண கவி.

தஞ்சை ராமய்யாதாசும், உடுமலை நாராயண கவியும் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரமும் சராசரி மனிதர்களை விட உயரமானவர்கள்.

கல்யாணசுந்தரமும் உரையாடலாசிரியர் ஏ.எல். நாராயணனும் நண்பர்கள். கல்யாணசுந்தரத்தை ஏ.எல். நாராயணன், உடுமலை நாராயண கவியிடம் அறிமுகப் படுத்தினார்.

"குட்டி ஆடு தப்பி வந்தா பாடலை நீயா எழுதினே? ரொம்ப நல்லா எழுதியிருக்கே! எதிர் காலத்திலே நல்லா வருவே !" - என்று வாழ்த்தினார் முதுபெரும் பாடலாசிரியர் உடுமலை நாராயண கவி.

சிரிப்பு நடிகர்களில் ஒருவர் சி.எஸ். பாண்டியன். சக்தி நாடக சபையில் பழக்கம்; 'மகேஸ்வரி' படப்பிடிப்பின் போது நெருக்கம். ஒருநாள் கல்யாணசுந்தரத்தை தேடி, சி.எஸ். பாண்டியன் வந்தார்: "பேசாம என்னோடு வாங்க... நீங்க போக வேண்டிய இடத்துக்குத்தான் உங்களைக் கூட்டிக் கொண்டு போகப் போறேன்!"

போனார்கள். அந்த வீட்டின் வரவேற்பு அறையில் கல்யாணசுந்தரத்தை உட்கார வைத்து விட்டு மாடிக்குப் போனார் பாண்டியன்.

"வா! பாண்டியா!" - தனது பழைய மாணவரை மகிழ்வோடு வரவேற்றார். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்.

'ஜனசக்தி'யில் வெளிவந்த 'நண்டு செய்த தொண்டு' கவிதையை பிரதி எடுத்து வைத்திருந்த பாண்டியன், அதைக் கலைவாணரிடம் கொடுத்தார்.

கவிதை முழுவதையும் படித்துப் பார்த்துவிட்டு "ரொம்ப அற்புதமான பாட்டு!" என்று பாராட்டினார் என்.எஸ். கிருஷ்ணன்.

"இதை எழுதியது யார் தெரியுமா?" - பாண்டியன் கேட்டார்.

"என்னடா புதிர் போடுறே? இப்படிப்பட்ட கருத்தாழம் உள்ள கவிதைகளை வேற யார் எழுதுவார்? நம்ம வாத்தியார் உடுமலை நாராயண கவிதான் எழுதியிருப்பார்!"

"கவிஞரை கீழே உட்கார வச்சிருக்கேன், நான் போய்க் கூட்டிட்டு வர்றேன்!"

அழைத்துக் கொண்டு வந்தார் பாண்டியன். "இவர் பெயர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். இவர் தான் இந்தக் கவிதையை எழுதியவர்."

கல்யாணசுந்தரத்தை ஆச்சர்யத்தோடு பார்த்தார் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன். நெடிய ஒல்லியான உருவம். கழுத்தில் நீளமான துண்டு, "தம்பி, ரொம்ப நல்லா எழுதியிருக்கே! அற்புதமான சிந்தனை... அழகான கற்பனை... நீ எப்படியும் பெரிய கவிஞனா வருவே !"

1956-ல், கல்யாணசுந்தரத்துக்கு இன்னொரு படம் - இரண்டு பாடல்களுடன் 'ரங்கோன் ராதா', 'மர்மவீரன்' படத்தில் இரண்டு பாடல்கள்.

1956-ல் வெளிவந்தவை எட்டு படங்கள்; தயாரிப்பிலோ எண்ணற்ற படங்கள்; பல்வேறு கதைகள், பலவகைப் பாடல்கள். ரசிகர்கள் விரும்பினார்கள்; இசையமைப்பாளர்கள் விரும்பினார்கள்; திரைப்படங்களின் இயக்குநர்கள் விரும்பினார்கள்; எனவே, தயாரிப்பாளர்கள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைத் தேடிப் பிடித்தார்கள்.

சினிமாச் செய்திகளுக்கென்றே பத்திரிகை நடத்துபவர்களும் அவற்றின் நிருபர்களும் கல்யாணசுந்தரத்தைத் தேடி அலைந்தார்கள். ஒருநாள் ஒரு செய்தியாளரிடம் அகப்பட்டுக் கொண்டார் கல்யாணசுந்தரம்...

"வாங்கோ! என்ன விஷயம்?"

"எங்கள் பத்திரிகையில் உங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதலாம் என்று ..."

"அப்படியா? பாடல் பதிவு ஒரு ஸ்டுடியோ ரெக்கார்டிங் தியேட்டரில் நடக்குது! பேசிக்கொண்டே போகலாம், வாங்க!"

அந்த நிருபரை தன்னுடைய அறையிலிருந்து அழைத்துக் கொண்டு தெருவில் நடக்கத் தொடங்கினார் கல்யாணசுந்தரம்.

சிறிது தூரம் நடந்த பின் ரிக்ஷாவொன்றில் ஏறி மவுண்ட் ரோடு வந்தார்கள்.

நகரப் பேருந்தில் ஏறி, கோடம்பாக்கம் ரயில்வே கேட்டில் இறங்கினார்கள்.

ரயில்வே கேட்டைக் கடந்ததும் டாக்ஸி ஒன்றைப் பிடித்து வடபழனி, ரெக்கார்டிங்குக்காக அந்த ஸ்டூடியோவின் பாடல் பதிவுக் கூடத்தின் முன்பு இறங்கினார். கூடவே வந்த நிருபர், "அண்ணே! வாழ்க்கை வரலாறு?" நினைவூட்டினார்.

"இதுதான் வாழ்க்கை வரலாறு! முதலில் நடையாய் நடந்தேன் பஸ்சில் போனேன். ரிக்ஷாவில் போனேன். இப்போ டாக்ஸி!"

1957-ம் ஆண்டின் தொடக்கத்தில், கல்யாணசுந்தரத்தின் பாடல்களுடன் 'சக்கரவர்த்தித் திருமகள்', 'அலாவுதீனும் அற்புத விளக்கும்', 'புதையல்' ஆகிய படங்கள் வெளிவந்தன. மேலும் படங்கள் தயாரிப்பிலிருந்தன.

மகிழ்ச்சி கொண்டாட வேண்டிய கல்யாணசுந்தரத்துக்கு பொதுத் தேர்தல் முடிவுகள் துயரத்தைத் தந்தன. அவரது மரியாதைக்குரிய தலைவர்கள் ஜீவானந்தம், மணலி கந்தசாமி, ஏ.எஸ்.கே. அய்யங்கார், பி. ராமமூர்த்தி ஆகியோர் தோற்றுவிட்டனர்.

சொந்த வேலையாக பட்டுக்கோட்டை நகருக்கு போயிருந்த போது தலைவர் மாசிலாமணியைச் சந்தித்து தேர்தல் தோல்வி பற்றி வருந்தினார்.

"இத பாரு கல்யாணம்! 1942-லிருந்து 1953-வரை நம்ம ஜில்லாவில் நடந்த பல போராட்டங்களில் 83 பேர் உயிரைத் தியாகம் செஞ்சிருக்காங்க. அவங்களைப் பற்றி சாதாரண சனங்க பாடறதுக்கேத்த 'கும்மி', 'நாடோடி' மெட்டுகள்லே பாட்டுக்கள் எழுதித்தா!" - என்றார் மாசிலாமணி.

"எழுதுறேன்! அடுத்த தேர்தல்லே நானே கிராமம் கிராமமா, தெருத் தெருவா 'டேப்' அடிச்சு பாட்டுப் பாடுவேன்!" என்றார் கல்யாணசுந்தரம்.

அதே ஆண்டில் கல்யாணசுந்தரத்தின் பாடல்களோடு 'கற்புக்கரசி'

'ஜனசக்தி' ஏட்டின் ஆசிரியர்களில் ஒருவரான ஐ. மாயாண்டி பாரதி, கல்யாணசுந்தரத்தை தேடிக்கொண்டு வந்தார்; "ரஷ்யாக்காரன் விண்வெளிக்கு ராக்கெட் விட்டுட்டான்! அதைப் பத்தி இப்பவே ஒரு பாட்டு எழுதிக் கொடுங்க .. உங்கள் பாட்டுக்காக மிஷினை நிறுத்திவிட்டு வந்திருக்கேன், ம...ஜல்தி ஜல்தி!" - என்றார். வெள்ளைத் தாளொன்றை எடுத்து வழக்கம் போல பிள்ளையார்

சுழி ('உ') சுழித்து, அதன் கீழே 'பாரதிதாசன் வாழ்க' என்றெழுதி விட்டு விவரம் கேட்டார் கல்யாணசுந்தரம்.

"ராக்கெட் அண்டவெளிக்குப் போய் பூம்பூம்னு சுத்தது! செய்தி அனுப்புது! அவ்வளவு தான்! உடனே கவிதையை எழுதுங்க!" - என்றார் மாயாண்டி பாரதி.

காகிதத்தை ஜன்னலில் வைத்து, நின்று கொண்டே எழுதினார் கல்யாணசுந்தரம் -

சந்திரனைத் தொட்டதின்று மனித சக்தி!
சரித்திரத்தை மாற்றியது மனித சக்தி!
இந்திரன் தான் விண்ணாட்டின் அரசனென்ற
இலக்கணத்தை மாற்றியது மனித சக்தி!
இந்திரனும் முடியரசாய் இருக்கொணாது
எனும் குறிப்பைக் காட்டியது மனித சக்தி!
மந்திரமா வெறுங் கதையா இல்லை இல்லை
மனித சக்தி, சோவியத்தின் மனித சக்தி!

படப்பிடிப்பு முடிந்து 'ஆரவல்லி', 'சவுபாக்கியவதி', 'அம்பிகாபதி', 'மகாதேவி', 'மக்களைப் பெற்ற மகாராசி' 1957-ம் ஆண்டில் வெளிவரத் தயாராக இருந்தன.

அடுத்து அடுத்து மேலும் மேலும் புதுப்புது படங்களுக்குப் பாடல் ஒப்பந்தங்கள் ...

அவற்றில் ஒன்று 'பாண்டித்தேவன்'

நடிகர் டி.கே.பாலசந்திரன் தனது நண்பர்களுடன் சேர்ந்து "மொராக் அண்ட் ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ்" சார்பில் தயாரிக்கும் படம்; அவரது நண்பர் கல்யாணசுந்ததரத்துக்கு ஐந்து பாடல்கள்.

விடுதலைப் போராட்டக் காலத்திலேயே முறபோக்கான கருத்துக்களுடன் 'பாலயோகினி', 'சேவாசதனம்', 'தியாகபூமி', படங்களை உருவாக்கிய கே.சுப்ரமணியம் 'பாண்டித்தேவன்' படத்தின் இயக்குநர்.

நடிகர் எம்.ஜி. ராமச்சந்திரன் டைரெக்டா கே.சுப்ரமணியததின் குடும்ப நண்பர். அப்போது எம்.ஜி.ஆர். சொந்தத்தில் 'நாடோடி மன்னன்' - என்னும் படத்தைத் தயாரிததுக் கொண்டிருந்தாா. அது குறித்த ஆலோசனைகளைப் பெறுவதற்காக எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிர்வாக மேலாளர் இராம. வீரப்பன் அடிக்கடி கே.சுப்ரமணியம் வீட்டுக்கு வருவார்.

"பல புதிய படங்களுக்குப் பாடல்களை எழுதிக் குவித்து வரும திறமான கவிஞர் இவர். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்பது

இவர் பெயர்" - என்று கே.சுப்ரமணியம், கல்யாணசுந்தரத்தை, இராம. வீரப்பனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

படங்களில் பார்த்திருக்கிறார், பாடல்களை வீரப்பன் கேட்டிருக்கிறார்.

கைகளால் மேஜையில் தாளம் போட்டுக் கொண்டே "காடு வெளஞ்சென்ன மச்சான் நமக்குக் கையும் காலும் தானே மிச்சம்! என்னும் பாடலை அப்போது கல்யாணசுந்தரம் பாடிக்காட்டினார்.

கல்யாணசுந்தரத்தை, வீரப்பன், எம்.ஜி.ராமச்சந்திரனிடம் அழைத்துப் போனார்.

"நாடோடி மன்னன்" படத்தில் அப்பாடல் இடம் பெற வேண்டும் என்பதற்கர்கவே, எம்.ஜி.ஆர். புதிதாக ஒரு காட்சியை உருவாக்கினார்.

மேலும் மேலும் படங்கள்.

புதுப் புது ஒப்பந்தங்கள்.

இசையமையாளர்கள் விரும்பினார்கள்.

பட இயக்குநர்கள் தேடி வந்தார்கள்.

"பட்டுகோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களோடு படம் வெளிவந்தால் படம் வெற்றிபெறும்!" என்று படமுதலாளிகள் நம்பினார்கள்; அப்போதைய பிரபல நடிகர்களான எம்.ஜி.ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், எஸ்.எஸ். ராஜேந்திரன் போன்றோர் விரும்பினார்கள்.

பிள்ளையார் சுழி...

'வாழ்க பாரதிதாசன்'...

எழுதி எழுதிக் குவித்துக் கொண்டே இருந்தார் கல்யாணசுந்தரம்.

☐ ☐ ☐

என்னருமை காதலிக்கு வெண்ணிலாவே...

திரை கடலோடி திரவியம் தேட சிங்கப்பூருக்குச் சென்றிருந்த அண்ணன் கணபதி சுந்தரம் ஊருக்குத் திரும்பியதும் சினிமாவுக்குப் பாடல்கள் எழுதி கொண்டிருக்கும் தம்பியைப் பார்க்க சென்னைக்கு வந்தார்.

“அண்ணே உங்களுக்குப் பொண்ணு பார்க்கனும், கல்யாணம் செய்யனும்! ஏற்பாடு பண்ணுங்க!” என்றார் கல்யாணசுந்தரம்.

ஊருக்கு வந்து சேர்ந்த கல்யாணசுந்தரம் பெண் பார்க்க ஆத்திக்கோட்டை கிராமத்துக்கு போனார். சொந்தத்திலேயே ஒரு பெண்.

அழகாகவும் உயரமாகவும் வாட்டசாட்டமான பெண்.

“இந்த பொண்ணு அழகுக்கு தம்பிதான் பொருத்தமா இருப்பான்!” - அண்ணன் முடிவு கட்டினார்; பெண் வீட்டாரிடம் சொன்னார்.

“தம்பி என்ன பண்றார்?”

“முன்னால நாடகங்களில் நடிச்சுக்கிட்டிருந்தான். இப்போ சினிமாவுக்கு பாட்டெழுதிக் கொண்டிருக்கிறான்!”

ஆத்திக்கோட்டையிலிருந்து பெண் வீட்டைச சேர்ந்த ஒருவர், செங்கப்படுத்தான்காட்டுக்கு கணபதிசுந்தரத்தைத் தேடிவநது சேதி சொன்னார்; “உனக்குன்னா பொண்ணு கொடுக்க அவங்க ரெடியா இருக்காங்க! நாடகம், சினிமான்னு அலையற உன்னோட தம்பிக்கு பொண்ணு கொடுக்க அவுங்க விரும்பலே!”

கணபதிசுந்தரம் சிங்கப்பூரிலிருந்த போது பரிச்சயப்பட்ட சின்னையன் என்பவர், அந்தப் பெண்ணின் அண்ணன்.

சின்னையன் தாயகம் திரும்புகிறார் என்று கேள்விப்பட்டு, சென்னை துறைமுகத்துக்கே சென்ற கணபதிசுந்தரம், தனது தம்பியின் அறைக்கு அழைத்துச் சென்றார்.

நடந்ததை எல்லாம் ஆதியாடந்தம் சொன்னார். அப்போதும் தம்பி கல்யாணசுந்தரத்துக்கு எதுவும் தெரியாது.

“அப்பா அம்மாவைப் பார்த்துட்டு வரலாம்!” என்று கூறி கல்யாணசுந்தரம், சின்னையனோடு பட்டுக்கோட்டைக்கு புறப்பட்டார் அண்ணன்.

முதலில் ஆத்திக்கோட்டைக்கு போனார்கள்.

பெண்ணைப் பார்த்தார்கள்.

குதிரை வண்டியில் வீடு திரும்பும் போது,

''ஏண்டா, கல்யாணம்! பொண்ணு புடிச்சிருக்கா?'' கணபதிசுந்தரம் கேட்டார்.

"பிரமாதம்ணே! அழகான பொண்ணு! நம்ம குடும்பத்துக்கு மருமகளா வர்றது பெரிய பாக்கியம்!'' - கல்யாணசுந்தரம் சொன்னார்.

"பொண்ணு உனக்குத் தான்! நீ தான் கட்டிக்கப் போறே! அண்ணன்.

"அப்படியா?'' - தம்பி

குதிரையின் கழுத்துப்பட்டைச் சலங்கைகளின் ஜல் ஜல் ஓசை.

ஏதோ ஒரு படத்திற்காக எழுதப்பட்ட பாடலின் பல்லவி, கல்யாணசுந்தரம் வாய்விட்டு மீண்டும் மீண்டும் பாடிக்கொண்டிருந்தார்-

என்னருமைக் காதலிக்கு
வெண்ணிலாவே - நீ
இளையவளா மூத்தவளா
வெண்ணிலாவே!

திருமணம் நடைப்பெற்ற செய்தியை 'ஜனசக்தி' வெளியிட்டது-

''பிரபல சினிமாக் கவிஞர் பட்டுக்கோட்டை திரு. கல்யாணசுந்தரம் அவர்களுக்கும் திருமதி கௌரவாம்பாளுக்கும் 11-9-1957-ம் தேதியன்று வெகு சிறப்பாக திருமணம் நடைபெற்றது. அந்த திருமணததிற்கு கவிஞர் பாரதிதாசன், தலைமை வகித்தார். ஏராளமான சினிமாக் கலைஞர்களும், படத் தயாரிப்பாளர்களும், எழுத்தாளர்களும், ரஸிகர்களும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினார்கள். எம்.ஜி. ராமச்சந்திரன், டி.எஸ். துரைராஜ், பரலி சு. நெல்லையப்பர், திருமதி சகுந்தலா பாரதி, சங்கு சுப்ரமணியம், தோழர் கே. முத்தையா ஆகியவர்கள் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள்.''

சென்னையில், வாடகைக்கு வீடு கிடைப்பது சுலபமல்ல. அதிலும் ராயப்பேட்டை அல்லது அதன் சுற்று வட்டாரத்திலேயே சுமாரான வசதியுடன் தேடிக்கொண்டிருந்தார் கல்யாணசுந்தரம்.

வீடு கிடைக்கும் வரை செங்கப்படுத்தான் காடு கிராமத்தின் சொந்த வீட்டில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை.

கல்யாணசுந்தரம் நேரம் கிடைக்கும் போதெல்லாம செங்கப்படுத்தான் காடு போவார்.

கௌரவாம்பாளை ''சின்ன பொண்ணு'' என்றும் "செல்லப்பிள்ளை" என்றும் அழைப்பார். தனிமையில் மனைவியைப் பார்க்கும்போது -

துள்ளித் துள்ளி அலைகளெல்லாம்
என்ன சொல்லுது? - பல
துண்டு துண்டாய் எழுந்து அது
எங்கே செல்லுது?

- என்று குறும்புத்தனமாகப் பாடுவார்.

சேலத்திலிருந்த போது அண்ணனுக்குத் தம்பி கடிதம் எழுதினார் (6-12-1957) -

''அன்பே உருவான அண்ணா அவர்களுக்கு! தம்பி கல்யாணசுந்தரம் வணக்கம். நான் நலமே வந்து சேர்ந்து நேற்று முதல் ஆரம்பித்து ஒரு பாடல் முடித்து விட்டேன். இன்னும் இரண்டு பாடல்கள் மூன்று தினங்களில் முடித்து விடுவேன். அன்புமிக்க அம்மாவுக்கும் மைத்துனருக்கும், அண்ணிக்கும், செல்லப்பிள்ளை கௌரவத்திற்கும் சொல்லுங்கள். தங்களிடம் கூறியபடி காரியங்கள் முடித்துக் கொண்டு வருகிறேன். வரும்போது எல்லோருக்கும் போர்வைக்குச் சொல்லி இருக்கிறேன். வாங்கி வருகிறேன். காப்பிக் கொட்டை பியூர் சரக்கு ஏற்காடு மலையில் கிடைக்கும். வாங்கி வருகிறேன். வேறு ஏதும் தேவை என்றால் எழுதுங்கள். அண்ணியையும் அம்மாளையும் ஒன்றும் மிரட்டாதீர்கள். முடிந்தால், கௌரவத்தின் கைப்பட ஒரு கடிதம் எழுதி, நீங்கள் எழுதும் கடித்துடன் அனுப்புங்கள். மருதகாசி வந்தால் நான் வந்ததும் கவனிப்பதாகச் சொல்லிவையுங்கள். சேலத்தில் 'மகாதேவி'ப் படம் ஜில்லா உரிமை வாங்கியிருக்கும் செட்டியார் எண்பதினாயிரம் லாபம், அதற்காக எனக்கும் நண்பா விசுவநாதனுக்கும் மாலை போட்டு வரவேற்பு நடத்தினார் நேற்று. எனக்கு சேலம் பொதுமக்கள் ஆதரவு நன்கு வளர்ந்திருக்கிறது. வேறு எதற்கும் யாரும் கவலைப்பட வேண்டாம். எல்லாம் நான் வந்ததும் பார்த்துக் கொள்கிறேன். அம்மாவுக்கு உடல் எப்படி? எல்லாம் எழுதுங்கள். கௌரவம் நன்கு படிக்கிறதா? அண்ணியை அப்படியே விட்டு விடாமல் மீண்டு பாடம் கேளுங்கள். என் சைன்டிபிக் முறைப்படி அண்ணிக்கும் படிப்பு வந்துவிடும் என்றே தோன்றுகிறது. தம்பியை எங்கேயும் அனாவசியமாகப் போக வேண்டாமென்று வீட்டில் இருக்கச் சொலலுங்கள். எல்லோரும் பகல் காட்சிக்கு சினிமாவுக்குச் சென்று வாருங்கள், ஒரேயிடத்தில் அடைத்துப் போடாமல். மற்றவை தங்கள் கடிதம் கண்டு. தங்கள் அ. கல்யாணசுந்தரம்."

□ □ □

டேப் அடிச்சுகிட்டு தெருவில் பாடுவேன்!

சென்னை, ராயப்பேட்டை ஜெகதாம்பாள் காலனியில் கல்யாணசுந்தரம் வீடு. மனைவி கௌரவம்பாளுடன் தனிக் குடித்தனம்.

வீட்டின் கீழ்த்தளத்தில், கல்யாணசுந்தரத்தைக் காண எப்போதும் கூட்டம். தயாரிப்பாளர்கள், இசையமைப்பாளர்கள், இயக்குநர்கள், பாடலுக்கான சூழ்நிலையைக் கூறும் கதாசிரியர்கள்.

''அப்படியா? இந்தப் பாடலை கவிஞர் கண்ணதாசன் எழுதினால் சிறப்பா இருக்கும்!''

"கண்ணதாசன் தான் நீங்க எழுதினர் எடுபடும்னு சொன்னார்" என்றார் வந்தவர்.

வந்தவர் மீண்டும் கவிஞர் கண்ணதாசனிடம் போய்விட்டு, மீண்டும் கல்யாணசுந்தரத்திடமே வந்தார்: ''நீங்கள் தான் எழுதினும்னு சொல்றார்!''

'பைகம்' என்னும் இந்திப் படம் ஏராளமாக வசூலித்துக் கொண்டிருந்தது. பிற மொழிகளின் வெற்றிப் படங்களை தமிழில் தயாரிப்பதில் ஏ.வி.எம் நிறுவனத்திற்கும், ஜெமினி நிறுவனத்திற்கும் கடுமையான போட்டி நிலவிய காலம் அது. ஜெமினி நிறுவனத்தார் 'பைகாம்' இந்தி படத்தின் கதையை தமிழில் மறுதயாரிப்பு (ரீ மேக்) செய்யும் உரிமையை வாங்கினர். தொழிலாளர் போராட்டச் சூழல் திரைக்கதை. 'பட்டுக்கோட்டை கல்யாணசுந்தராம் பாடல்களை எழுத வேண்டும்' என்று விரும்பிய ஜெமினி நிறுவனத்திலிருந்து பிரதிநிதி ஒருவர் வந்தார். "பைகாம் கதையை 'இரும்புத் திரை' என்ற பெயரில் தயாரிக்கிறோம். நீங்கள் பாடல்களை எழுத வேண்டும்!" என்றார்.

''ஜெமினி தயாரிக்கிறதா? அங்கே கொத்தமங்கலம் சுப்பு இருக்கிறாரே? பிரமாதமா பாட்டு எழுதுவாரே! பெருங்கவிஞர் இருக்கும் போது அங்கே நான் வருவது நியாயமில்லை! என்னாலே அப்படியெல்லாம் செய்ய முடியாது!''

அவர் போய்விட்டார்.

'பாகப் பிரிவினை' படத்தின் ஒரு பாடல் காட்சியை சரவணா பிக்சர்ஸ் ஜி.என்.வேலுமணி விளக்கிக் கொண்டிருந்த போது கொத்தமங்கலம் சுப்பு வந்தார்.

வாசலுக்கே ஓடோடி, வணக்கம் கூறி வரவேற்று அழைத்து வந்தார் கல்யாணசுந்தரம்.

"அம்பி, நீ கொஞ்சம் நேரம் எங்களோட ஆபீசுக்கு வந்திட்டு வரணும்! கார் கொண்டுவந்திருக்கேன் வா!" என்றார் சுப்பு.

தட்டிக் கழிக்க முடியவில்லை.

ஜெமினி அதிபர் எஸ்.எஸ். வாசன் இருந்தார்.

"அம்பி தான், பட்டுக்கோட்டை கவிஞர்!"

எஸ்.எஸ்.வாசன் விளக்கினார்: "இதப்பாருங்க! கொத்தமங்கலம் சுப்பு எங்க ஆஸ்தான வித்வான். மாசச் சம்பளம்! நீங்க எழுதிறதாலே இவருக்கு நஷ்டம் வராது! நான் எடுக்கிறது லேபர் சப்ஜெக்ட்! தொழிலாளர் ப்ராப்ளம் பாடல்களை நீங்க எழுதுங்க! சுப்பு பொதுவான பாடல்களை எழுதட்டும்! சரிதானே?"

சம்மதித்தார் கல்யாணசுந்தரம்.

தமிழக கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்களில் ஒருவர் மணலி கந்தசாமி.

'திராவிட முன்னேற்றக் கழகத்தின மு.கருணாநிதியின் 'புதையல்', 'ரங்கோன் ராதா' படங்களுக்குப பாடல்கள் எழுதிய கல்யாணசுந்தரம், இப்போது எம.ஜி.ராமசந்திரனின் 'நாடோடி மன்னன்' படத்துக்கும் எழுதுறானே? அந்தக் கடசிக்கே போயிடுவானோ?' என்பதே அவரது சந்தேகம்!

சந்தேகத்தை பட்டுக்கோட்டை மாசிலாமணியிடம சொனனார் மணலி கந்தசாமி.

மணலியின் சந்தேகத்தை, கல்யாணசுந்தரததின உறவினரான செங்கப்படுத்தான்காடு பிரத்தினம் பிள்ளையிடம சொனன மாசிலாமணி, "ரத்தினம்! நீங்களே மெடராசுக்குப போய் தெரிஞ்சுகிட்டு வாங்க!" என்று அனுப்பிவைததார் ரததினம சென்னைக்கு புறப்பட்டார்.

ரத்தினம் சொன்ன செய்தியைக் கேடடதும. கல்யாணசுந்தரம வாய்விட்டு சிரித்தார்.

அப்புறம் சொன்னார: "தோழர் மணலியே என்னைச சந்தேகப்படுகிறாரா? எங்க குடும்பம் இப்போ இருக்கிற நிலைமையும வறுமையும் உங்களுக்குத் தெரியும் இன்னும் ரெண்டு வருஷநதான் நான் சினிமாவுக்குப் பாடடெழுதுவேன் அதுககுள்ளே எங்க குடும்ப நிலைமை ஓரளவு சரியாயிடும் அப்புறம் பாருங்க ... கம்யூனிஸ்ட கட்சிக்காக டேப் அடிச்சுகிடடு தெருத்தெருவா பாடுவேன. கம்யூனிஸ்ட் கட்சிக்காக பாடல்களையும் காவியங்களையும் இநத கல்யாணசுந்தரம் எழுதுவான்!"

மேலும் மேலும் படங்கள்
புதுப் புது ஒப்பந்தங்கள்
இசையமைப்பாளர்கள் விரும்பினார்கள்
பட இயக்குநர்கள் தேடிவந்தார்கள்
பிள்ளையார் சுழி ...
'வாழ்க பாரதிதாசன்!'

எழுதி எழுதிக் குவித்துக் கொண்டே இருந்தார் கல்யாணசுந்தரம்.

□ □ □

தூங்காமல் இரவு - பகல் பாடுபட்ட தோழர்களே !

'ஜனசக்தி' சுதந்திர தின மலருக்குக் கவிதையொன்று எழுதித் தருவதாக கல்யாணசுந்தரம் ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால், உரிய நேரத்தில் கிடைக்கவில்லை. கல்யாணசுந்தரத்தை வீட்டில் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஐ.மாயாண்டி பாரதியும் அவரது நண்பரும் பல இடங்களில் தேடி, நாராயணன் கம்பெனி என்னும் படத்தயாரிப்பு நிறுவனத்தில் கண்டு பிடித்தார்கள். அப்போது பகல் 12.

மேல் மாடியில் பாட்டெழுத உட்கார்ந்திருந்த கல்யாணசுந்தரம், மாயாண்டி பாரதி வந்திருப்பதைக் கேள்விப்பட்டு கீழிறங்கி வந்தார்; அவர்களை அந்த மாடி அறைக்கு அழைத்துச் சென்றார்.

வழக்கமான புன்னகை. அப்புறம் "மன்னியுங்கள்!" எனறார்.

"நீங்க பிஸியா இருக்கிறீங்க!" எனறார் மாயாண்டி பாரதி.

கல்யாணசுந்தரம் முகம் வாடியது: "என்னை நீங்கள் கேவலம் செய்றீங்க..."

"ஏன் அப்படி நினைக்கிறீங்கள்?"

"ஜனசக்திக்குக் கவிதை எழுதாமல் வேற எதுக்குப் பாட்டெழுதிக் கிழிக்கவாம்?

மாயாண்டி பாரதி மவுனமானார்.

"சரி உட்காருங்கோ, பாட்டை முடிச்சிட்டுப் போகலாம்" என்று சொன்ன கல்யாணசுந்தரம், கழுத்தில் தொங்கிய மஞ்சள் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, பேப்பரையும் பென்சிலையும எடுத்து எழுதத் தொடங்கினார்.

எழுத எழுத, மாயாண்டி பாரதியிடம், பாட்டை படிததுக் காட்டி கொண்டிருந்தார். படத்தின் இயக்குநர் சில தடவைகள் அந்த அறை அருகே வந்து எட்டிப் பார்ததார் மாயாண்டி பாரதியின் நணபர் சினிமா வட்டாரப் பிரமுகர் ஒருவரின் மகன். அவரை சைகையின் மூலம் அந்த இயக்குநர் வெளியே அழைத்தார் "என்ன சாா! பதினஞ்சு நாளா தேடி அலைஞ்சு இந்த ஆளைப் பிடிச்சிகிட்டு வந்து பாட்டெழுத வச்சிருக்கோம் இப்படி செஞ்சுட்டாங்களே, இது நியாயாமா?" என்று கடிந்து கொண்டார்.

'ஜனசக்தி' கவிதை எழுதி முடிக்கப்பட்ட போது மாலை நானகு மணி.

கல்யாணசுந்தரம், மாயாண்டி பாரதி, அவரது நண்பர் மூவரும் கீழே வந்தார்கள். அப்போது தான், இயக்குநர் வருத்தப்பட்டதை, மாயாண்டி பாரதியின் நண்பர் கல்யாணசுந்தரத்திடம் சொன்னார்.

"ஹூம் இன்னிக்கு அவர் கம்பெனிச் செலவில் ஜனசக்திக்குப் பாட்டெழுதனும்னு அவர் தலையிலே எழுதியிருக்கு! நாம் என்ன செய்ய?" -என்று சொன்னார் கல்யாணசுந்தரம். அன்று அவர் எழுதிய கவிதை -

சுதந்திரத்தைப் பெற்றுவிட்டாள் இந்தியத் தாய்
சொல்லவொண்ணா மகிழ்ச்சியிலே திளைப்பாள் என்று
தூங்காமல் இரவு பகல் பாடுபட்ட
தோழர்களே! தாய்மாரே! தந்தைமாரே!
சிறை வாழ்க்கை! வேற்றாரின் கொடிய சட்டம்!
சித்ரவதை குண்டடிகள் யாவுந் தாங்கித்
தேகமெலாந் தியாகவடுப் பெற்று நின்ற
சிங்கங்காள்! செக்கிழுத்த சிதம்பரமே!

உயிரிழந்தும் செங்குருதி மண்ணிற் பாய்ந்தும்
உரிமைக்கொடி காத்திட்டக் குமரக் குன்றே!
வறுமையினைச் சுமந்துகொண்டு விடுதலைத் தாய்
வருகைக்கு முழக்கமிட்ட பாரதியே!
கொடுமையெலாம் விடுதலையின் குறிதான் என்று
குறுநகைத்த தில்லையாடி வள்ளியம்மா!
ஒருமையிலே சக்திஇல்லை, பன்மை வேண்டும்
ஒன்றுதிரள் வோமென்ற சுபாஷ் வீரா!

உரிமைபெற்றும் கடமையெல்லாம் முடிப்பதற்குள் மத
வெறியனால் பலியான பெரியோய் காந்தி!
தான் மறைந்தும் புகழ்மறையாத் தொண்டு செய்த
தலைவர்களே! நீங்களெல்லாம் இன்றிருந்தால்
தியாக வடுக்களை எல்லாம் கண்களாக்கி
தேசத்தை நனைத்திருப்பீர் கண்ணீராலே!
அங்குமிங்கும் வசை பெற்றுச் சுதந்தரத் தாய்
அவதியுறும் நிலைகண்டா லுங்கள் நெஞ்சம் -

அனலில் மெழுகென உருகிப் போயிருக்கும்!
அடுத்தாண்டில் இனும்பலவுங் கூறு கின்றேன்
தலைக்கெல்லாம் தலையாய தலைமைத் தாயே
சரித்திரத்தில் இடங்கொண்ட சுதந்திரநாளில்
கொலை நடந்த விபரமெல்லாம் கூறுதற்குக்
கூசுகின்றேன் மற்றுமுள்ள விபரம் சொல்வேன்:

சுதந்திரத்தைப் பெற்ற முதல் ஓர் நாளேனும்
துளியும் நீ மகிழ்ந்ததுண்டா? உன்றன் மக்கள் -
உகந்து மன ஒற்றுமையாய் வாழ்ந்த துண்டா?
உன்னைத்தான் மதித்ததுண்டா? உயர்ந்ததுண்டா?
எங்கோர் பகுதியிலே ஒன்றுபட்டார்
எனிலதனை ஆதரிக்கும் முறை தானுண்டா?
பெரும்வெயிலால் வண்டல்நிலம் வெடிப்ப தைப்போல்
பிளவுபட்டுப் பிளவுபட்டுச் சுயநலத்தால்
வருமான வேட்கையிலே புகுதலன்றி
மனதிலேதும் விசாலமுண்டா? பொது நோக்குண்டா?

இதுவரை நீ, மகிழ்ந்திருப்பாய் என்ற எண்ணம்
என்போன்றார்க் கில்லை! இனியேனும் அந்தப்
புதுவாழ்வும் ஒற்றுமையும் புனிதத் தொண்டும்
பொலிகவென வணங்குகின்றோம்! அன்னையே, நீ
பூரிக்கும் அந்நாளை எதிர் பார்க்கின்றோம் !

- "சுதந்தரத்தாயின் மகிழ்ச்சி..." என்னும் தலைப்பிலான இக்கவிதை 'ஜனசக்தி'யின் 15-8-1958 மலரில் வெளிவந்தது.

□ □ □

கடவுள் இருப்பதும் இல்லை என்பதும்

1958-ம் ஆண்டில், கல்யாணசுந்தரம் பாடல்களுடன் 'கன்னியின் சபதம்', 'உத்தமபுத்தரன்', 'பதிபக்தி', 'பெற்ற மகளை விற்ற அன்னை', 'திருமணம்', 'நாடோடி மன்னன்', 'அன்பு எங்கே?' - எட்டு படங்கள் வெளிவந்தன.

புத்தா பிலிம்ஸ் அதிபர், இயக்குநர் ஏ.பீம்சிங் அவர்களிடம் 'பாசவலை' படப் பாடல்களின் சிறப்பை கூறி அவற்றை எழுதிய கல்யாணசுந்தரத்தை அறிமுகம் செய்து வைத்தார் இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன்.

'பதிபக்தி' படத்தின் அனைத்துப் பாடல்களையும் கல்யாணசுந்தரத்தையே எழுத வைத்தார் ஏ. பீம்சிங். அத்தனை பாடல்களும் மகத்தான வெற்றி பெற்றன. பாடல்களுக்காகவே 'பதிபக்தி' படத்தை மீண்டும் பலர் பார்த்தார்கள்.

எந்தப் பாடலை எழுதினாலும் 'பிள்ளையார் சுழி' யுடன் 'வாழ்க பாரதிதாசன்' - என்றெழுதிவிட்டுத் தொடங்குவார் கல்யாணசுந்தரம் என்பது திரை உலகினருக்கு தெரியும். அவர் 'ஆத்திகரா, நாத்திகரா?' சிலருக்குச் சந்தேகம்.

'பதிபக்தி' படத்தில், "தர்மமென்பார் நீதியென்பார்" என்று தொடங்கும் பாடலில் கல்யாணசுந்தரம் எழுதினார் -

கடவுள் இருப்பதும் இல்லை என்பதும்
கவைக்குதவாத வெறும்பேச்சு!
கஞ்சிக் கில்லாதார் கவலை நீங்கவே
கருத வேண்டியதை மறந்தாச்சு!

'பேசும்படம்' மாத இதழ், '1958-ம் ஆண்டின் சிறந்த திரைப்படப் பாடலாசிரியர்' என்று அறிவித்துவிட்டு, கல்யாணசுந்தரத்திடம் கட்டுரை வாங்கி வெளியிட்டது; அந்த கட்டுரையில் -

■ *"ஒரு பாடலை பற்றி சிந்திக்கும் போது, அந்த நேரத்தில் சூழ்நிலை எப்படி இருக்கிறதோ, எப்படி கவிஞனுக்கு ஒத்துழைக்கிறதோ அதிலிருக்கிறது பாட்டின் உயர்வு. தனியாக இருப்பதையே விரும்பாத நான் - எங்கும் எல்லோருடனும் அன்பாகப் பழகும் நான் - எழுதத் தொடங்கியதும் தனிமையை விரும்புவேன். ஆனால் அங்கங்கே உட்கார்ந்து, அடைப்பட்டுக் கிடந்து, வேண்டுமென்றே கருத்துக்களைத் தேடுவதை விட சுதந்திரமாக, கட்டுப் பாடின்றி நிமிர்ந்த நடையுடன், பார்வையை எங்கும் திருப்பிச் சிந்தனைப் புலன்களைக் குறுக்காமல் விசாலமாக்கிக் காணும் போது தான், இயற்கையிலேயே கவிதைகள் உதிரும். பாடல்கள் உயிருடன் பிறக்கும். சில பாடல்களைப் போல்*

செத்துப் பிறக்காது. இதுதான் கருத்து. இதை நான் மற்றவர் களுக்காகக் கூறவில்லை. என்னால் முடிந்தவரை மேறகூறிய முறைகளைக் கையாளுவேன். எழுதுவதைவிட எழுதாமல உணர்ச்சியோடு, உற்சாகத்துடன் பாடவேண்டும். பாடிய பின் எழுத வேண்டும். இப்படி எழுதும் பாடல்கள் எக்காலததிலும் சாகாது"

■ "உண்மையான அழகும், மனங்கனிந்த அன்பும், செவிகளுக்கு இனிமையான ஒலிகளும் தான் என் உள்ளத்தைக் கவர்ந்த காதற் துணைவிகள். நான் கவிதை எழுத ஆரம்பிக்கும் முன் பறவை இனங்களையும், மிருக இனங்களையும், தாவர இனங்களையும கண்டு ரசிப்பேன். விளைவற்ற தரிசு நிலங்களை எனக்குப் பிடிககாது. அதுபோல் அன்பில்லாத முகங்களையும், அறிவில்லாத செயல்களையும் எனக்குப் பிடிக்காமல் போனதில் வியப்பில்லை என்று எண்ணுகிறேன்."

■ "நான் நன்றாகப் பழகிய, என் அனுபவ வாயிலாகக் கணட நண்பர்களின் நடைமுறைகளை ஆதாரமாக வைத்துக் கவிதை எழுதுவேன். அரை வயிற்றுக் கஞ்சி குடித்தாலும் முயற்சி, ஒறறுமை, கட்டுப்பாடு இவைகளைக் கைவிடாமல் வாழ்க்கையோடு எதிர் நீச்சலடித்துக் கொண்டு, என்றாவது ஒரு நாள், நாம் எதிர்பார்த்த வாழ்வு கிடைக்கும் என்று எண்ணி, மனங்கொண்டது மாளிகையாக மரத்தடியே வீடாக வாழும் மக்களைப் பற்றி என் உள்ளம் அதிகமாக ஆராயும் தகுதியைப் பெற்றிருக்கிறது. அழகிய பூங்காவிலும், பெருங் காடுகளிலும், வயல் வெளிகளிலும் வாழும் பறவை இனங்களும் என் மனதைக் கவருவதுண்டு. அவைகள் இரை தேடி வந்து தம் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டுவதைக் கண்டு மெய் மறந்து ரசிப்பேன் அவைகள் கொஞ்சிக் குலவிக் கத்தும் ஒலிகள் நான் எந்த வாத்தியத்திலும் கேட்டறியாத இனிய கீதங்களாகும். இவைகள் தான் நான் அமைக்கும் கவிதைகளுக்கு மூல காரணங்களாகும்..."

■ "ஒரு நாள் நான் வயல் பார்க்கச் சென்று திரும்பும் போது, வேப்ப மர நிழலில் அமர்ந்தேன். நல்ல நிழலோடு குளிர்ந்த தென்றலும் என்னை வந்து தழுவவே எதிரிலிருக்கும் ஏரியையும் கண்டு ரசித்துக் கொண்டிருந்தேன். தண்ணீரலைகள் நெளிந்து நெளிந்து ஆடிவர, தாமரை மலர்கள் எம்மைப் பார்! எம் எழிலைப் பார்! என்று குலுங்க, ஓர் இளங்கெண்டை பளிச்சென்று துள்ளிக் கரையோரத்தில் கிடந்த தாமரை இலையில் நீர்முத்துக்களைச் சிந்தி விட்டுத் தலை கீழாய்க் குதித்தது. அதுவரை மவுனமாக இருந்த நான், என்னையும் மறந்தவனாகப் பாடினேன். இதுதான் அது ....

ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே - கரை
ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே!
தூண்டில்காரன் வரும் நேரமாச்சு - ரொம்பத்
துள்ளி குதிக்காதே கெண்டைக் குஞ்சே!

■ "இதை அங்கே ஆரம்பித்த நான், வீடு திரும்பும் வரை பாடிக்கொண்டே வந்தேன். எல்லோரும் அதைப் பலமுறை பாடச் சொல்லி மிகவும் ரசித்தார்கள். எனக்கு அப்போது 15 வயது. பாடல் இலக்கணங்கள் எப்படி என்று அறியாத நேரம் அது. எல்லோரும் ரசித்ததிலிருந்து, ஓ ---கோ- இப்படித்தான் பாடல் எழுத வேண்டும் போலிருக்கிறது என்று சிந்தித்த நான் அன்று முதல் சுவையான நிகழ்ச்சிகள், பறவை இனங்கள், அழகிய காட்சிககள், அறிஞர்கள் - மடையர்கள், இன்னும் மாடுகள் - ஆடுகள், நாய்கள் எல்லாவற்றையும் பற்றி வேடிக்கையாகப் பாடுவதுண்டு."

■ "பனகல் என்று தியாகராய நகரில் ஒரு பூங்கா இருக்கிறது. அதில் நான் சிந்தனை செய்வதற்கென்றே போய் உட்காருவேன். ஒரு நாள் 'சக்கரவர்த்தி திருமகள்' படத்திற்காகப் பாடல் ஒன்று எழுதக் கேட்டிருந்த படியால் பொதுவாகவும் எல்லோரும் பாடலின் கருத்தில் அங்கம் வகிப்பவர்களாகப் பாடல் அமைந்தால் நல்லது என்று நான் சிந்திக்கும் வேளையில், பூங்காவில் பேசிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர், "அவன் குணம் அப்படி, இவன் குணம் இப்படி. அதுக்கு ஆரென்ன செய்யரது?'' - என்று அவர்களுக்குள் எழுந்த வார்த்தை என் செவிகளில் விழவே, "ஆமாம், மனிதனின் குணம் எப்போது மாறுகிறது? இருக்கும் குணம் எப்போது பிரிந்து போகிறது? மீண்டும் மனிதனுடன் எப்பொழுது வந்து சேருகிறது?" என்று ஆராய்ச்சி பண்ணியவாறே உமா பிக்சர்ஸுக்குச் சென்று மாடியில் அமர்ந்தேன். பூனை ஒன்று என் பக்கததில் நின்றது. "உறங்கையிலே பானைகளை உருட்டுவது பூனைக் குணம்" - பூனைக்குணம், குரங்குக் குணம், முதலைக் குணம் எல்லாம் சொல்லி, முடிவில், "இத்தனை குணங்களும் மனிதனிடம் மொத்தமாய் வாழுதடா!" - என்று தொகையறாவை முடித்து, "மனிதன் பொறக்கும் போது பொறந்த குணம் போகப் போக மாறுது! எல்லாம் இருக்கும் போது பிரிந்த குணம் எறக்கும் போது சேருது!" - மனிதன் உயிர் போகும் போது, எவ்வளவு கொடியவனாக அவன் வாழ்க்கையில் வாழ்ந்திருந்தாலும் உயிர் போகுமுன் ஒரு நிமிடத்தில் தன் வாழ்க்கையில் செய்த தவறுகளைச் சிந்தித்து உணருகிறான். அவனைப் பிரிந்திருந்த குணமும் அப்போதுதான் அவனைச் சேருகிறது. உடனே மூச்சு நின்று விடுகிறது. அவன் தான் உணர்ந்ததை மற்றவர்களுக்குச் சொல்லக் கூட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறான் - என்ற இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பாடலை முடித்தேன்."

— இந்தக் கட்டுரையின் தலைப்பு "பாட்டு பிறந்த விதம்"

□ □ □

பொங்காத பெருங்கடல் பொங்கி வந்தது போல்!

பாடல்கள் எழுதுவதில் முனைப்பாக இருந்ததால் நாடகங்களில் நடிப்பதை நிறுத்தியிருந்தாலும் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அதன் விவசாய சங்க நிதிக்காக நடைபெறும் நாடகங்களுக்கு தனது சினிமா செல்வாக்கையும் புகழையும் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்திருந்தார் கல்யாணசுந்தரம். நிதி நாடகங்களுக்குத் தலைமை தாங்கினார். அவரைக் காண வரும் ரசிகர்களால் வசூலும் அதிகமாகும்.

தஞ்சை மாவட்டம் கீரமங்கலத்தில் விவசாயிகள் சங்க மாநாட்டில் 'சிவராமன் நாடக மன்ற'த்தின் நாடகம். தலைமை தாங்க வரவேண்டும் என்று பட்டுக்கோட்டை மாசிலாமணி அழைத்திருந்தார்.

கீரமங்கலம் வருவாய்த்துறை அதிகாரி வீட்டில் தங்கியிருந்தா கல்யாணசுந்தரம்.

நாடக மேடைக்கு அழைத்துச் செல்ல வந்த மாசிலாமணியிடம் பட்டுவேட்டி பட்டுச் சட்டையைக் காட்டினார் கல்யாணசுந்தரம். "இத உடுத்திகிட்டு நிகழ்ச்சிக்கு வரலாமா?" என்று கேட்டார்.

"ஏன் அப்படிக் கேட்கிறீங்க?"

"விவசாயிங்க பட்டினியில் வாடும்போது நீ பட்டு வேஷ்டி பட்டுச் சட்டை போட்டுகிட்டுப் போகாதே! மாசிலாமணி கண்டிப்பார்னு ஐ.மாயாண்டி பாரதி சொல்லி அனுப்பிச்சார்!"

"பட்டுச் சட்டை போடுறது தப்பில்லை... பாமர மக்களை மறந்திடக் கூடாது! மறந்திருந்தா இந்த மாநாட்டுக்கே நீங்க வந்திருக்க மாட்டீங்களே! அதனால் உங்களோட உள்ளம் எங்களுக்கும் ஏழை மக்களுக்கு தெரியும்!... ஆகவே உடுத்திக்குங்க!" - என்றார் மாசிலாமணி.

தலைமை உரை சில நிமிடங்கள் தான். பின்னர் மேடையில் சில பாடல்களைப் பாடி கரவொலிகளைப் பெற்றார் கல்யாணசுந்தரம்.

சத்திரப்பட்டி கே.சுந்தரராஜ் தொழில் முறையில்லாத (அமெச்சூர்) நாடகக்குழுவொன்றைத் தொடங்கி, கேரள மக்கள் கலைக்குழுவின் "நிங்களென்னை கம்யூனிஸ்டாக்கி" என்னும் தோப்பில் பாஸி எழுதிய நாடகத்தை தமிழில் மொழி பெயர்த்து

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நளினி தியேட்டரில் 24-4-1959 அன்று நடத்தினார்.

தலைமை தாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவிஞர் முகவை ராஜமாணிக்கம் தனக்குப் பதிலாக பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தை அனுப்பி வைத்திருந்தார்.

கல்யாணசுந்தரம் மேடைச் பேச்சாளரல்லர். சில நிமிடங்கள் பேச்சு: "நம்முடைய நாடகங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும்! நடைமுறை வாழ்க்கைக்கு மாறான அடுக்கு மொழி வசனங்கள் கூடாது! பாடல்களும் அப்படியே அமைய வேண்டும். கல்யாணப்பரிசு படத்தில் பாடப்படும் "அக்காளுக்கு வளை காப்பு" பாடல் என் குடும்பத்தில் நடந்த வளைகாப்பு நிகழ்ச்சியின் போது என் மனைவி கௌரவாம்பாள் இட்டுக்கட்டிய முதலிரு வரிகளை எடுத்துக் கொண்டுதான் எழுதினேன். இப்போ என் மனைவியை பிரசவத்திற்காக ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறேன். முகவை ராஜமாணிக்கம் சொன்னாரே, நிதி நாடகமாச்சேன்னு வந்தேன்!"

பின்னர் சில பாடல்கள்

நாடகம் முடிந்து உணவுக்குப் பின் பரமக்குடி மா.முத்துச்சாமியோடும் சத்திரப்பட்டி சுந்தரராஜுவோடும் விடிய விடிய உரையாடிக் கொண்டிருந்தாலும் நினைவெல்லாம் கௌரவாம்பாள்...

சென்னைக்கு வந்து சேர்ந்ததும் நேடியாக மருத்துவமனைக்கு பறந்தார்.

சுகப்பிரசவம்.

ஆண் குழந்தை.

'குமாரவேல்' என்று பெயரிட்டார் கல்யாணசுந்தரம்; கொஞ்சி மகிழ்ந்தார்.

கூடுதல் பொறுப்பு எனக் கருதி, புதுப்புது ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டார், புதிய புதிய பாடல்களை எழுதி எழுதிக் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

"இன்னும் இரண்டு வருஷந்தான் நான் சினிமாவுக்குப் பாட்டெழுதுவேன். அதுக்குள்ளே எங்க குடும்ப நிலைமை ஓரளவு சரியாயிடும். அப்புறம் பாருங்க... கம்யூனிஸ்ட் கட்சிக்காக டேப் அடிச்சிகிட்டு தெருத் தெருவா பாடுவேன். கம்யூனிஸ்ட் கட்சிக்காக பாடல்களையும் காவியங்களையும் இந்த கல்யாணசுந்தரம் எழுதுவான்!" - ரத்தினத்திடம் கொடுத்த வாக்குறுதி எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

எழுதுகோல் எழுதிக் கொண்டே இருக்கிறது.

ஓய்வில்லை! எழுது கோலுக்கும் சிந்தித்துக் கொண்டே இருக்கும் மூளையின் ரத்த நாளங்களுக்கும்.

இடையில் .....

'ஜனசக்தி' சுதந்திர தின மலருக்காக கவிதை கேட்டு வந்தார் ஐ.மாயாண்டி பாரதி: "கவிஞரே, ஜீவா கட்டளை! அன்புக் கட்டளை!"

"எழுதிடுறேன் தோழரே!"

செக்கச் சிவந்த செழுங் கதிரோனும்
கிழக்கினில் வந்து விட்டான் - புவி
மக்கள் மதிக்கண் விழித்துக் கிளம்பிட
வானில் உதித்து விட்டான்!

கொக்கரக் கோவெனக் கோழியும் கூவுது
கொக்கோடு பற்பல புட்களும்
சக்கரம் போலே ஜகம் சுழன்றாடுது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது!

பத்துத் திசையிலும் - ஜன
சக்தி முழங்கிடுதே!

தெற்கில் ஒருகுரல் தென்பாங்கு பாடுது
தீய செயல்களைச் செங்கைகள் சாடுது
-பக்குவம் கொண்ட படை பல கூடுது
சிக்கலறுத்துப் பொது நடை போடுது!

சொத்தை மனந்திருந்தப் - புதுச்
சத்தம் பிறந்திடுதே!

கத்தும் பறவை கனி மரத்தில் வந்து
ஒற்றுமை காட்டிடுதே! - தலைப்
பித்தம் பிடித்தொரு கூட்டம் தனித்தனி
பேதம் வளர்த்திடுதே!
ரத்த வியர்வைகள் சொட்ட உழைத்தவன்
நெற்றி சுருங்கிடுதே - ஏழை
உத்தமர் வாழ்வை உறிஞ்சும் உலுத்தரின்

கொட்டம் அடங்கிடுதே - மக்கள்
வெற்றி நெருங்கிடுதே!

இப்பாடலை மாயாண்டி பாரதியிடம் கொடுத்து விட்டு கல்யாணசுந்தரம் சொன்னார்: "இன்றிரவு புறப்பட்டு தொழிலாளர் நகரத்துக்குப் போறேன்"

"நாடகங்களுக்குத் தலைமை தாங்கத் தானே?"

"இப்போதைக்கு இதுதானே என்னாலே முடிஞ்சிடும் வர்க்கப் பணி!"

14-8-1959 இரவு 'நீலகிரி எக்ஸ்பிரஸ்' ரயிலில் கல்யாணசுந்தரமும், டி.கே.பாலச்சந்திரனும் புறப்பட்டனர்.

கோவை சாமி தியேட்டரில், மக்கள் நாடக மன்றத்தினரின் இரண்டு நாடகங்கள்

ஆகஸ்ட் 15 இரவு "பாட்டு முடியும் முன்னே"

ஆகஸ்ட் 16 இரவு "நீதியாம் நீதி"

இரு நாடகங்களுக்கும் தலைமை: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். கம்யூனிஸ்ட் கட்சி நிதி நாடகங்கள்.

16-8-1959 அன்று கோயமுத்தூர் முற்போக்கு மன்றங்கள் சார்பில் ஸ்டேன்ஸ் மில் திருமண மண்டபத்தில் பிரம்மாண்டமான பாராட்டு விழா.

மண்டபத்திற்குள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள், "மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் வாழ்க" - என்று முழக்கமிட்டனர்.

பட்சிராஜா திரைப்படத் தயாரிப்பு நிறுவன அதிபர் ஸ்ரீராமுலு நாயுடு தலைமையில், நகரசபைத் தலைவர் பூபதி, தொழிற்சங்கத் தலைவர் கே.ரமணி (இருவரும் கம்யுனிஸ்ட்டுகள்) ஆகியோர் கவிஞரையும் கலைஞர்களையும் வாழ்த்திப் .பேசினார்கள்.

வரவேற்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

மறுநாள், ஆகஸ்ட் 17-ம் தேதியன்றும் கோவை புறநகர்ப் பகுதிகளில் பாராட்டுக் கூட்டங்கள், அங்கெல்லாம் கூட "மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் - வாழ்க!" முழக்கங்கள்.

அனைத்துப் பாராட்டுக் கூட்டங்களிலும் கல்யாணசுந்தரம் சொன்னார்: ''மக்கள் கவிஞர் என்று நீங்கள் என்னை அழைக்கிறீர்கள். உங்கள் முன் நான் சபதம் ஏற்கிறேன்! நான் என்றும் மக்கள் பக்கத்தில் நிற்பேன்! உழைக்கும் மக்களோடு வாழ்வேன்! மக்களுக்காகவே பணிபுரிவேன்!"

கோவை ஓட்டலில் தங்கியிருந்த போது "தொழிலாளி மக்களின் கையொலி, வாழ்த்தொலிகள் தந்த உற்சாகத்தால் என் உடம்பின்

எடை ரெண்டு பவுண்ட் பெருத்துவிட்டது'' என்றார் கல்யாணசுந்தரம்.

1959-ம் ஆண்டு, கல்யாணசுந்தரத்தின் பாடல்களோடு 15 படங்கள் வெளிவந்தன. அவற்றில் முதல் படம் "தங்கப்பதுமை' (10-1-1959). படத்தில் ஒன்பது பாடல்கள் கல்யாணசுந்தரத்துக்கு: "ஈடற்ற பத்தினியின்..." என்று தொடங்கும் பாடலில் இந்த வரிகள் .....

மனிதன் ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே - அவன்
ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே!
ஆராய்ந்து பார் மனக்கண்ணுக்குள்ளே!
ஆத்திரங்கொள்ளாதே நெஞ்சுக்குள்ளே!

தொடர்ந்து 'பாண்டித்தேவன்', 'கல்யாணப்பரிசு', (அத்தனை பாடல்களும்), 'நல்ல தீர்ப்பு', 'கல்யாணிக்குக் கல்யாணம்', 'கலைவாணன்', 'தலை கொடுத்தான் தம்பி', 'புதுமைப் பெண்'...; இப்படத்தில் ....

பொங்காத பெருங்கடல் பொங்கி வந்தது போல்
பொங்குது உள்ளமெல்லாம் அன்பில் முழங்குதடா!
போகாத துன்பமெல்லாம் போனதே என்று
தீராத சண்டைகளும் தீர்ந்ததடா!
உரிமை நிலைத்ததடா உண்மை பிழைத்ததடா!
உழைப்பவன் கேள்வியை உலகம் மதித்ததடா!
நீதியின் வெற்றியடா சேரியின் வெற்றி - அதை
நிரந்தர மாக்குது பார் பொது ஜனசக்தி!

-என்று தொடங்கும் பாடல். 'புதுமைப் பெண்' படத்தைத் தொடர்ந்து 'வாழவைத்த தெய்வம்', 'அவள் யார்?' 'கண் திறந்தது', 'பாகப்பிரிவினை', 'அமுதவல்லி', 'பொன்னு விளையும் பூமி', முதலிய படங்கள்.

□ □ □

ஆனாலும், பொல்லாத 1959...

"காலை எட்டு மணிக்கு தேநீர் குடித்தார்... ஒன்பது மணிக்கு என்னமோ செய்யுது என்றார்!" என்று கல்யாணசுந்தரம் வீட்டிலிருந்து புறப்பட்ட இந்தச் செய்தி கவிஞர் கண்ணதாசன் வீட்டுத் தொலைபேசியில் முணுமுணுத்தது.

அலறித்துடிக்கும் இதயத்தோடு எம்.ஜி.ராமச்சந்திரன் வீட்டுக்குப் பறந்தார் கண்ணதாசன். அவருக்கும் அந்தச் செய்தி எட்டியிருந்ததால் அவர் தனது உதவியாளர்களுடன் புறப்படத் தயாராக இருந்தார். எல்லோரும் இரண்டு கார்களில் ஜெகதாம்பாள் காலனி வீட்டிற்குச் சென்றார்கள்; அங்கிருந்து அரசு பொது மருத்துவமனை...

கல்யாணசுந்தரம் நினைவிழந்து இருந்தார்.

என்ன நோய்? மருத்துவர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். பெரிய மருத்துவர் கண்ணதாசனை கலக்கத்துடன் அழைத்தார்; "மன்னிக்க வேண்டும் இது மூளை நோய். ரத்தக் குழாய் வெடிச்சிருக்கு... நான் நம்பிக்கை சொல்லமுடியாது. முயற்சி பண்றோம்".

கலங்கியவாறு நின்று கொண்டிருந்த கண்ணதாசனிடம் கல்யாணசுந்தரத்தின் அண்ணன் கணபதிசுந்தரம் ஓடிவந்தார்; "அண்ணா! தம்பி ஏமாத்திடுவானா? அவன் போடுற சோத்தைத் தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்!" - கதறினார்.

கல்யாணசுந்தரத்தை அறுவை சிகிச்சை அரங்கிற்குள் கொண்டு சென்றார்கள்.

8-10-1959 மாலை 3-45

மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரத்திற்கும் மரணம் சம்பவித்தது...

ராயப்பேட்டை ஜெகதாம்பாள் காலனி வீட்டில் அன்று மாலையே சினிமா வட்டாரத்தினர் ஒவ்வொருவராகக் கூடத் தொடங்கினா.

இயக்குநர்கள், இசையமைபபாளர்கள், பின்னணிப் பாடகர்கள், எம்.ஜி. ராமச்சந்திரன், எம்.ஜி. சக்கரபாணி, சந்திரபாபு, சகஸ்ரநாமம், கல்யாணசுந்தரத்தின் நண்பர்களான டி.கே. பாலச்சந்திரன், ஏ. வீரப்பன், டி.கே. சண்முகம், டி.கே. பகவதி, டி.என். சிவதாணு, சிவாஜி கணேசனின் நாடக மன்றத்தினர், ஜெமினி கணேசன், டி.வி. நாராயணசாமி, எஸ்.எஸ். ராஜேந்திரன், கே.ஆர். ராமசாமி, டி.எஸ். பாலையா.

கவிஞர்கள் உடுமலை நாராயண கவி, கு.மா. பாலசுப்ரமணியம், கு.சா. கிருஷ்ணமூர்த்தி...

ப. ஜீவானந்தம், எம்.ஆர் வெங்கட்டராமன், பி. ராமமூர்த்தி, வி.பி. சிந்தன், ஏ.எஸ்.கே. அய்யங்கார், கே. முத்தையா, ஐ. மாயாண்டி பாரதி, எம்.பி.'சீனிவாசன், த. ஜெயகாந்தன் ஆகிய கம்யூனிஸ்ட்கள், தி. மு. கழகத்தின் கலைஞர் மு. கருணாநிதி, தமிழரசுக் கழகத்தலைவர் ம.பொ. சிவஞானம்...

நடிகைகள் சாவித்திரி, எம என்.ராஜம், பண்டரிபாய்...

நடிகை பண்டரிபாய் அப்போது 'மகாலட்சுமி' என்னும படத்தை தயாரித்துக் கொண்டிருந்தார். அதற்குப் பாடல் எழுதிய வகையில் கொடுக்க வேண்டிய தொகையை கல்யாணசுந்தரம் காலடியில் பண்டரிபாய் வைத்தார்; அந்த பாடலின் தொடக்கம் ....

தானா எவனும் கெட மாட்டான்
தடுக்கி விடாம விழ மாட்டான்
போனா எவனும் வரமாட்டான் - மேலே
போனா எவனும் வரமாட்டான் - இதப்
புரிஞ்சுகிட்டவன் அழமாட்டான்!

மருத்துவமனையிலிருந்து காட்டுத் தீ போலப் பரவிய செய்தியின் விளைவு மட்டுமே அக்கோடபர் எட்டாம் தேதி மாலையில் திரண்ட பெருங்கூட்டம் ....

மறுநாள் காலை நாளேடுகளில் கல்யாணசுந்தரம் மரணச் செய்தியைப் படித்துவிட்டு ரசிகர்களும, கம்யூனிஸ்ட் கடசியினரும் பெருமளவில் வந்து கொண்டேயிருந்தனர்.

கிராமத்திலிருந்து, கல்யாணசுந்தரத்தின் உறவினர்களை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவனத்தினர் அழைத்து வந்தனர்.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவனத்தினர் நிர்மாணித்த மலர் மஞ்ச வாகனத்தில் மக்கள் கவிஞரின் உடல் பிற்பகல் ஒரு மணிக்கு ஏற்றப்பட்டு இறுதி ஊர்வலம் புறப்பட்டது.

சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்கத்தின் செந்தொண்டர் படையின் தளபதி, கவிஞரின் உடல் மீது செங்கொடி போர்த்தினார்

மலர் வாகனத்தின் முன்னே, ராணுவததினர் போல செந்தொண்டர் படையின் அணிவகுப்பு.

செங்கொடிகள், தொழிற்சங்கக் கொடிகளுடன, சென்னைத தொழிலாளர் சம்மேளனத்தினர், மதராஸ் ஹார்பர் தொழிலாளர்கள், வங்கி ஊழியர்கள், அச்சகத் தொழிலாளர்கள், ஓட்டல் தொழிலாளர்கள், மாநகராட்சி - மின்வாரியம் - ஸ்டுடியோ

தொழிலாளர்கள், திரையுலகப் பிரமுகர்கள், அரசியல் தலைவர்களோடு 'ஜனசக்தி', நியுசெஞ்சுரி புத்தக நிலையத் தொழிலாளர்கள் மவுன ஊர்வலத்தில் பங்கு கொண்டனர். ஊர்வலம் எலியட்ஸ் சாலை வழியாக மயிலாப்பூர் மயானத்தை அடைந்தது.

அங்கே, தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் சக்தி கிருஷ்ணசாமி தலைமையில் இரங்கல் கூட்டம்.

தலைமையுரையில் சக்தி கிருஷ்ணசாமி கூறினார்: "என்னுடைய சக்தி நாடக சபையில் நடிகனாகவும், கவிஞனாகவும் இருந்த கல்யாணசுந்தரம் எத்தனையோ திட்டங்களை வைத்திருந்தார். நான் சாகும் வரையில் அவர் உயிரோடிருந்து என்னைப் பற்றிப் பாட வேண்டிய கல்யாணசுந்தரம் இறந்துவிட்டாரே? கவிஞன் இறப்பதில்லை..."

"உலகத்துக்கெல்லாம் பாட்டுக் கொடுத்தார். பாட்டு முடியும் முன்னே வீணையை வைத்து விட்டுப் போய் விட்டார். முற்போக்குக் கலைஞன் வழிகாட்டிக் கவிஞன் இருக்கிறான் என்று இருந்து வந்த தெம்பு எனக்கு இப்போது சாய்ந்து விட்டது!" - என்று சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் அப்பன்ராஜ் சொன்னார்.

கம்யூனிஸ்ட் தலைவர் ப. ஜீவானந்தம் பேசிய பிறகு -

அவ்வை டி.கே. சண்முகம் பேசினார்: "தமிழ்கத்தின் இன்றைய இளைய தலைமுறையில் சிறந்த கவிஞனாகவும் ஒப்பற்ற பண்பாளனாகவும், இளமைப் பருவத்தில் இவ்வளவு பொருள் நிறைந்த தத்துவப் பாட்டுக்களை இவர் எப்படிக் கொட்டிக் குவிக்கிறார் என்று என் போன்றவர்களை ஆச்சர்யத்தில் மூழ்கடிக்கச் செய்தவராக உள்ள ஒரு கவிஞனை இழந்து விட்டோம். பெரும் கவிஞருக்கெல்லாம் கிடைக்காத வார்த்தைகள் இந்த இளம் கவிஞனுக்கு எப்படிக் கிடைத்ததோ என்று ஆச்சர்யப்படுகிறேன். இவரது இழப்பு - ஜீவா கூறியது போல் - தமிழகத்துக்கும், உலகத்துக்குமே நஷ்டம். இப்போது அவருக்கு 29வயது தானாகிறது. இந்த இளம் வயதிற்குள்ளாக திரை உலகிலே அவர் மிக உன்னத இடத்தைப் பெற்று விட்டார். அண்மை வருடங்களில் அவர் பாட்டு எழுதாத திரைப்படங்களே கிடையாது. எந்தத் திரைப்படம் வெற்றியடைய வேண்டுமானாலும் அவரது பாட்டுகள் அவசியம் அதில் இடம் பெற வேண்டும் என்னும் நிலையை ஏற்படுத்தி விட்ட பெருமை அவரைச் சேர்ந்தது".

முகவை ராஜமணிக்கம்: "கல்யாணசுந்தரம் சோழ நாட்டின் உழவன் மகன். உழவனுக்குப் பிறந்து, உழவர் வாழ்வு மேன்மையுற தித்திக்கும் செந்தமிழ் பாடல்கள் எழுதினார் !"

"கல்யாணசுந்தரம் எனது ஆப்த நண்பன். எம்.எஸ்.விஸ்வநாதன் என்னிடத்தில் வந்து 'சந்தித்தால், நீ, இப்பட்டிப்பட்டவனைத்தான் சந்திக்க வேண்டும்' என்று கூறி அறிமுகப்படுத்தினார். கவிஞர் என் உள்ளத்தைக் கவர்ந்தார். பெரிய மனிதனுடன் பழகுவது போன்ற பெருமித உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது" என்றார் நடிகர் சந்திரபாபு.

கவிஞர் கண்ணதாசன் தனது அஞ்சலி உரையில், "நட்புக்கும், செம்மையான வாழ்க்கை நெறிக்கும், பண்புக்கும் சிறப்பானவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். ஒவ்வொரு படத்திலும் அவரது பாடல்களைக் கேட்ட எனக்கு ஒரு கவிஞனை இழந்து விட்டோமே என்னும் துக்கமே மேலிடுகிறது. என்னைக் காட்டிலும் உயர்ந்தவர் ஒருவருக்குச் செலுத்த வேண்டிய மரியாதையையும் அன்பையையும் அவருக்குச் செலுத்துகிறேன். மணமாகி, இரண்டு வருடங்கள் ஆவதற்குள்ளாக ஐந்து மாதக் குழந்தையையும் மனைவியையும் விட்டு விட்டுப் போய்விட்டாரே என்று அறிய என்னால் அழமுடியாமலிருக்க முடியவில்லை. அவரது பாதங்களைப் பணிந்து எனது துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" - என்று கூறினார்.

நடிக நண்பர் டி.கே.பாலச்சந்திரன் பேசும் போது சொன்னார்: "பட்டுக்கோட்டை எங்களுடன் வாழ்ந்தார். எங்கள் நாடகத்தில் நடித்தார். ஜீவா குறிப்பிட்ட 'தேனாறு பாயுது! செங்கதிர் சாயுது! ஆனாலும் மக்கள் வயிறு காயுது!' என்ற பாடலை எங்களுக்கு எழுதிக் கொடுத்தார். அவரது பாடல்களின் மேன்மையை நாடறியும். என்றாலும் எங்களிடம் வந்து படித்துக் காட்டி நாங்கள் சரிசொன்ன பிறகு தான் திருப்பிப் பாடுவார். நாலைந்து வருஷங்களுக்கு முன்னே சாப்பாட்டுக்குக் கூட கஷ்டப்பட்டார் என்றாலும் வாய்திறந்து உதவி கேட்க மாட்டார். எங்கள் நிலைமையும் அப்போது அப்படித்தான் இருந்தது ..."

"நாங்கள் அண்ணன் தம்பி போலப் பழகி வந்தோம். மதிப்பிற்குரிய ஜீவாவும், டி.கே.சண்முகம் குறிப்பட்டது போல, கல்யாணசுந்தரத்தின் பிரிவு, தமிழகத்திற்கும் கலை உலகத்திற்கும் இழப்பு என்பதே நம் அனைவரின் அபிப்பிராயம். கல்யாணசுந்தரம் மக்களோடு வாழ்ந்த மக்கள் கவிஞர். தி.மு.கழகம் சார்பில் வணக்கத்தையும் அனுதாபத்தையும் செலுத்துகிறேன். அறிஞர் அண்ணாவும் தனது துக்கச் செய்தியை அனுப்பியுள்ளார்" - என்று எஸ்.எஸ்.ராஜேந்திரன் சொன்னார்.

நடிகர் கே.ஆர். ராமசாமி, இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதன் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.

தென்னிந்திய நடிகர் சங்கச் செயலாளர் டி.வி.நாராயணசாமி: "கலை உலகம் துயரக் கடலில் மூழ்கிக் கிடக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு வாழ்ந்து செய்து முடிக்க வேண்டிய நற்பணிகளை

ஒரு சில ஆண்டுகளுக்குள் செய்து முடித்த ஒப்பற்ற கவிஞன் கல்யாணசுந்தரம். இன்று மகேஸ்வரனைப் பற்றி பாடக்கூடிய ஆயிரமாயிரம் கவிஞர்கள் உள்ள இந்த நேரத்தில், மக்களைப் பற்றி பாடக் கூடிய கவிஞர்களிலே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரத்தை நாம் இன்று இழந்து தாங்க முடியாத துயரத்தை தாங்கிக் கொண்டிருக்கிறோம். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் மறைவுக்குப் பின் நமக்கு ஏற்பட்ட மிகப்பெரிய நஷ்டம் இது" எனறார்.

□ □ □

பாட்டுக்கு மெட்டா? மெட்டுக்குப் பாட்டா?

அனைத்துப் பாடல்களையும் கல்யாணசுந்தரமே எழுதி அந்த அனைத்து பாடல்களும் வெற்றி கண்ட படங்கள் பல. அவற்றுள் ஒன்று, 'கல்யாணப்பரிசு'.

அந்தப் படத்திற்கு இசை அமைத்தவர், ஏ.எம்.ராஜா. ஏ.எம்ராஜா அனுபவம் இது -

"சினிமாவில், ஒன்று - முதலில் பாடலை எழுதிவிட்டு பிறகு இசை அமைப்பது; இரண்டு, இசை அமைத்து விட்டு பாடல் எழுதுவது என்ற இரண்டு முறைகள் உண்டு. இவற்றில் இசை அமைத்துவிட்டு பாடல் எழுதுவது என்பது கொஞ்சம் கஷ்டமானது. ஆனால் கவிஞர் பட்டுக்கோட்டை இவ்விரண்டு வழிகளிலும் சிறந்து விளங்கினார் ... இசையை மட்டுமே கேட்டுக் கொண்டு அதற்கேற்ற வார்த்தைகளைப் போடும் முறை அவரிடம் காணமுடியாது. இசையைக் கேட்டுக் கொள்ளும் அதே நேரத்தில், படத்தின் கதையை குறிப்பாகப் பாடலுக்கேற்ற காட்சியை மிகத் தெளிவாகக் கூறும்படிக் கேட்பார். பொததாம் பொதுவில் எந்தக் கதைக்கும் எந்த காட்சிக்கும் பொருந்துகிறார்ப் போல ரெடிமேட் பாடலைத் தராமல் - காடசிக்கு ஏற்ற கதைக்கு ஏற்ப வார்த்தைகளையும் கருத்துக்களையும் சிந்தித்துப் பார்த்துப் போடும் தன்மை அவரிடம் இருந்தது ..."

- இது ஏ.எம். ராஜாவின் அனுபவ அபிப்ராயம்...

வாகினி ஸ்டூடியோவுக்குச் சொந்தமான விஜயா கார்டனில் 'கல்யாணப்பரிசு' படத்தின் 'வெள்ளி விழா' நடந்தது. கல்யாணசுந்தரம் கலந்து கொண்ட சினிமா தொடர்பான கடைசி நிகழ்ச்சி அது. நாள்: 24-9-1959.

கலைஞர்களுக்கு சிவாஜி கணேசன், 'கல்யாண மண்டபம்' போல செய்யப்பட்ட கேடயங்களை தயாரிப்பாளர் சார்பில் வழங்கினார். நாகிரெட்டி வாழ்த்திப் பேசினார்.

விழாவுக்குப் பிறகு விருந்து.

சாப்பிட்டு முடித்து வெற்றிலைப் பாக்கை மென்றபடி ஓர் ஓரத்தில் நின்று கொண்டிருந்தார் கல்யாணசுந்தரம். சினிமா மாத ஏடொன்றின் செய்தியாளர் அவர் அருகில் வந்தார்..

"உங்களை நான் பார்க்க வேண்டும் என்றிருந்தேன்" - என்றார் கல்யாணசுந்தரம்.

"என்ன விஷயம்?" - செய்தியாளர் கேட்டார்.

கல்யாணசுந்தரம் கேட்டார்: "கவிஞன் என்பவன், பல்வேறு இசைக் கருவிகளை வைத்து சங்கீதத்தை உண்டாக்கும் கலைஞரைப் போல, வார்த்தைகளைப் பொறுக்கி எழுதுபவனோ?"

"எனக்குப் புரியாத ஒன்றைக் கேட்கிறீர்கள்! என்னைப் பொறுத்த வரையில், கவிதை என்பது இதயத்தில் சுரந்து, எண்ணத்தில் மிதந்து வருவது. சொற்களைக் கண்டு பிடித்துப் போட்டு எழுதினால் அதி கவிதை ஆகாது!"

"இதை நமது சங்கீத டைரக்டர்கள் ஏன் உணருவது இல்லை? மெட்டு அமைக்க அவர்களுக்கு நமது கவிதை ஏற்றதாக இல்லாவிட்டால் மெட்டை மாற்றுவதற்குப் பதில் கவிதையை ஏன் மாற்றச் சொல்கிறார்கள்? அதற்காகச் சொற்களை எப்படிப் பொறுக்கிப் போட வரும்?" - என்றார் கல்யாணசுந்தரம்.

தொடர்ந்து சொன்னார் கல்யாணசுந்தரம்: "இங்கு இது மட்டுமா? நடிகர்கள் கூட கவிதைகளில் கை வைத்து விடுகிறார்கள். ஒரு பெரிய தயாரிப்பாளருக்காக நான் பாட்டொன்றை எழுதினேன். அக்கவிதையை ஹாஸ்ய நடிகர் சொல்படி மாற்றிவிட்டார் அந்தத் தயாரிப்பாளர். நடிகர்கள் தங்கள் கருத்தைச் சொல்லலாமே தவிர பாடலை மாற்றக் கூடாது என்பது என் அபிப்பிராயம். அப்படிப் பார்க்கப் போனால் கவிஞர்களும் நடிகர்களைப் பற்றி குறை கூற நேரிடும். கவிதையில் வரும் சொற்களின் ஆழத்தையும் நயத்தையும் பொருளையும் உணர்ந்து எத்தனை நடிகர்கள், பாடி, நடிக்கிறார்கள்? அதே போல் நடனப் பாடல் காட்சிகளில் எத்தனை நடிகைகள் பாவத்துடன் உணர்ந்து ஆடுகிறார்கள்? நடிகைகள் காட்டும் அபிநயத்துக்கும் பாட்டுக்கும் அனேகமாகப் பொருத்தம் காணவே முடியாது ... இதனால் கவிஞனுக்கு ஏற்படும் உற்சாகத்தைக் குலைத்து விடுகிறார்கள்!"

இதுபற்றி எல்லாம் கட்டுரையொன்று எழுதித் தருவதாக கல்யாணசுந்தரம் சொன்னார்.

"உங்களிடமிருந்து கட்டுரை வருவதுதான் சீக்கிரத்தில் நடக்காத காரியமாயிற்றே?" எனறார் செய்தியாளர்.

"இம்முறை அப்படி நடக்காது. அப்படி ஒருக்கால் தடை ஏற்பட்டு விட்டால், இப்போது சொன்னவற்றை 'பேட்டி' என்ற வகையில் உங்கள் பத்திரிக்கையில் வெளியிட்டுவிடுங்கள்!" என்றார் கல்யாணசுந்தரம்.

கல்யாணசுந்தரம் 8-10-1959ல் மரணம் அடைந்தார்.

அந்தச் செய்தியாளரின் மாத ஏட்டின் 1959 நவம்பர் இதழில் "கவிஞர் தந்த கடைசி பேட்டி" பிரசுரமாயிற்று.

திரைப்படப் பாடலாசிரியர் என்ற முறையில், சினிமா உலகில், கல்யாணசுந்தரம் திருப்தியோடு வாழ்ந்தாரா?

"சீர்காழி! நின் பேர் வாழி!" என்று குரல் கேட்டால், பின்னணிப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜனின் நண்பர் கல்யாணசுந்தரம் வந்திருப்பதாகப் புரிந்து கொள்வார் டாக்டர் சிவசிதம்பரம். (சிவசிதம்பரம் எம்.பி.பி.எஸ். சீர்காழி கோவிந்தராஜனின் புதல்வர்).

1958-ம் ஆண்டில் ஒருநாள்.

"கவிஞரே! மேடைக் கச்சேரிகளில் பாடுவதற்கு, தனிப்பாடல் ஒன்று எழுதித் தாருங்களேன்!" - என்று கேட்டார் சீர்காழி.

ஐந்தே நிமிடங்களில் எழுதிக் கொடுத்தார் கல்யாணசுந்தரம்.

(பல்லவி)

அந்தக் கவிஞன் பெயர் யாரறிவார்? - உலக
அதிசயமாய் விளங்கும் அரியணையே - நீ
விரும்பும் (அந்தக் கவிஞன்)

(அநுபல்லவி)

சிந்தையில் கலைக்கன்னி, திருநடம் புரிகின்ற
சுந்தரனோ கவிதைத் தோட்டம்
வளர்த்தவனோ? (அந்தக் கவிஞன்)

(சரணம்)

மக்கள் விரும்பும் குணம் வாய்ந்தவனோ? - தமிழில்
வல்லவனோ மிகவும் நல்லவனோ?
மங்காத புகழ் கொண்ட சங்கப் புலவன் தானோ?
மணிமுடி அணிவேந்தர் வணங்கிடும்
வாணனோ? (அந்தக் கவிஞன்)
மதியில்லாதவரை மனிதராக்கி அறம்
வளரச் செய்திட வந்தவனோ? - தலை
விதியினால் வளரும் வினைகள் ஏகமென
விந்தைப் புராணம் வரைந்தவனோ?
பரமனைக் காணத் தரகனைத் தேடும்
பக்தி மிகுந்தவனோ? - மனக்
கருணை அன்பொடு அறிவெனும் வீடு
கட்டி முடித்தவனோ? (அந்தக் கவிஞன்)

பொது நலம் பேணும் புதுமைக் கவிஞனோ?
பொருளுக்காகப் பல பொய் புனைந்தவனோ?
புத்தொளி வீசிட மெத்த நகைச்சுவை
அத்தனையும் தரும் உத்தமனோ?
பித்த மனத்தினர் புத்தி தெளிந்திடும்
சக்தி அளித்த மருத்துவனோ?

அரசியற் சபையிற் அனுமதிக்க ஒரு
அருகதையற்ற சிறுவனோ? - கல்வி
அமைந்திடப் பெற்ற அறிஞனோ?
ஜாதிவெறியனோ? நீதி நெறியனோ?
அவனோ? இவனோ? எவனோ?
அந்தக் கவிஞன் பெயர் யாரறிவார்? - உலக
அதிசயமாய் விங்கும் அரியணையே - நீ
விரும்பும் அந்தக் கவிஞன் பெயர் யாரறிவார்?

பாடலைப் படித்துப் பார்த்தார் சீர்காழி கோவிந்தராஜன்: "கவிஞரே! பாடலின் தலைப்பு என்ன?"

"அந்தக் கவிஞன் யார்?"

"புதிர் போடுகிறீர்களா கவிஞரே? அந்தக் கவிஞன் நீங்கள் தான்!" - எனறார் சீர்காழி கோவிந்தராஜன்.

இந்தப் பாடலில் ஒலிப்பது ஆனந்த பைரவியா? முகாரியா? சக்கரவாகமா?

கேட்டுத் தெரிந்து கொள்ள இப்போது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் இல்லை, இப்பாடலை மேடைனில் பாடிய சீர்காழி கோவிந்தராஜனும் இல்லை.

கல்யாணசுந்தரம் சிந்திப்பதையும் எழுதுவதையும் நிறுத்திய பிறகு, ஏற்கனவே அவர் எழுதி முடித்த பாடல்களுடன் 1960-ல் - 'இரும்புத்திரை', 'இரத்தினபுரி இளவரசி', 'சங்கிலித்தேவன்', 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்', 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு', 'ஆளுக்கொரு வீடு', 'பாதை தெரியுது பார்', 'வீரக்கனல்', 'மகாலட்சுமி', 1961-ல் 'அரசளங்குமரி', 'புனர் ஜென்மம்', 'திருடாதே', 'குமாரராஜா', 1962-ல் 'எதையும் தாங்கும் இதயம்', 1965-ல் 'மகனே கேள்' ஆகிய படங்கள் வெளிவந்தன. 'மகனே கேள்' படத்தில் ஒரு பாடலின் முதல் பகுதி ....

மணவறையில் சேர்த்து வைத்து
வாழ்த்துரைக்கும் ஓர்காலம்!
மக்களைப் பெற்று மகிழ வைக்கும் ஓர் காலம்!
மனதிலே பாசங்கள் வளர்ந்து மறைந்த பின்னே
கனவு கண்டு விழிப்பது போல் கலைந்துவிடும் ஓர் காலம்!
காலம்...காலம்! சூதாட்டம் ஆடும் காலம்! - பல
மாறாட்டம் செய்து போகும்!
வாதாடி என்ன லாபம்? - துயர்
மலிந்தோர்க்கு ஏது நியாயம்?

□ □ □

கோட்டைக்குப் போன பட்டுக்கோட்டையின் பாடல்கள்...

'நாடோடி மன்னன்' படம் தயாரித்த எம்.ஜி. இராமச்சந்திரன் 1972-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதியன்று, தி.மு.கழகத்திலிருந்து நீக்கப்பட்டார்; அதே மாதம் 16-ம் தேதியன்று எம்.ஜி.இராமச்சந்திரன் 'அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்' என்னும் கட்சியைத் தொடங்கி, 1977-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, தமிழக முதலமைச்சர் பதவியை ஏற்றார்.

முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனை செய்தியாளர்கள் கேட்டனர்: "உங்கள் ஆட்சியின் கொள்கை என்ன? செயல் திட்டம் என்ன?"

அந்தக் கேள்விக்கு முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன், "நாடோடி மன்னன் படம் பாருங்கள்" என்று பதில் சொன்னார்.

அவரது அமைச்சர்கள், அவரால் நியமனம் பெற்ற வாரியத் தலைவர்கள் 'நாடோடி மன்னன்' திரைப்படத்தைப் பார்த்தே திருவது என்பதை அரசுக் கடமையாக ஏற்றார்கள். 1958-ல் வெளியான அப்படம் 1977-ல் மறுவெளியீடு செய்யப்பட்டது.

ஒலியிழை (ஆடியோ கேஸெட்)யில் பதிவு செய்யப்பட்ட 'நாடோடி மன்னன்' பாடல்கள் பெருமளவில் விற்பனையாகின.

கோட்டையின் கொள்கையாகவும், அரசின் செயல் திட்டமாகவும் எம்.ஜி.ராமச்சந்திரனால் அறிவிக்கப்பட்டவை, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய இரு பாடல்களாகும்; அவற்றில் ஒன்று ஆணும் பெண்ணும் பாடும் இரு குரலிசை (டூயெட்) பாடலாகும்; அந்தப் பாடல் ....

பெண்:

சும்மா கெடந்த நெலத்தைக் கொத்தி
சோம்பலில்லாமே ஏர் நடத்தி
கம்மாக் கரையை ஒசத்திக் கட்டி
கரும்புக் கொல்லையிலே வாய்க்கால் வெட்டி

சம்பாப் பயிரைப் பறிச்சு நட்டு
தகுந்த முறையில் தண்ணீர் விட்டு
நெல்லு வெளைஞ்சிருக்கு - வரப்பும்
உள்ளே மறைஞ்சிருக்கு - அட
காடு வெளைஞ்சென்ன மச்சான் - நமக்குக்
கையும் காலுந்தானே மிச்சம்?

ஆண்:

இப்போ
காடு வெளையட்டும் பொண்ணே - நமக்குக்
காலமிருக்குது பின்னே!
மண்ணைப் பொளந்து சொரங்கம் வெச்சு
பொன்னை எடுக்கக் கனிகள் வெட்டி
மதிலு வெச்சு மாளிகை கட்டி
கடலில் மூழ்கி முத்தையெடுக்கும்
வழிகாட்டி மரமான
தொழிலாளர் வாழ்க்கையிலே
பட்ட துயரினி மாறும் - ரொம்பக்
கிட்ட நெருங்குது நேரம்!

பெண்:

அட
காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்குக்
கையும் காலுந்தானே மிச்சம்?

ஆண்:

இப்போ
காடு வெளையட்டும் பொண்ணே - நமக்குக்
காலமிருக்குது பின்னே!

பெண்:

மாடா ஒழைச்சவன் வாழ்க்கையிலே - பசி
வந்திடக் காரணம் என்ன மச்சான்?

ஆண்:

அவன்
தேடிய செல்வங்கள் வேறே இடத்திலே
சேர்வதினால் வரும் தொல்லையடி!

பெண்:

பஞ்சை பரம்பரை வாழ்வதற்கு - இனிப்
பண்ண வேண்டியது என்ன மச்சான்?

ஆண்:

தினம்
கஞ்சி கஞ்சி என்றால் பானை நிறையாது -
சிந்திச்சி முன்னேற வேணுமடி!

பெண்:

வாடிக்கையாய் வரும் துன்பங்களை இன்னும் -
நீடிக்கச் செய்வது மோசமன்றோ?

ஆண்:

இருள் மூடிக்கிடந்த மனமும் வெளுத்தது - சேரிக்கும்
இன்பம் திரும்புமடி!

பெண்:

அட
காடு வெளைஞ்சென்ன மச்சான்- நமக்குக்
கையும் காலுந்தானே மிச்சம்?

ஆண்:

நானே போடப் போறேன் சட்டம்! - பொதுவில்
நன்மை புரிந்திடும் திட்டம்!
நாடு நலம் பெறும் திட்டம்!
நன்மை புரிந்திடும் திட்டம்!
நாடு நலம் பெறும் திட்டம்!

'நாடோடி மன்னன்' படத்தில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய இன்னொரு பாடல், எம்.ஜி.ராமச்சந்திரன் தனது ஆதரவாளர்களுக்குக் கூறும் அறிவுரை போலவும் கட்டளை மாதிரியும் அமைந்தது ....

தூங்காதே தம்பி தூங்காதே - நீயும்
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே! - நீ
தாங்கிய உடையும் ஆயுதமும் - பல
சரித்திரக் கதை சொல்லும் சிறைக் கதவும்
சக்தியிருந்தால் உனைக் கண்டு சிரிக்கும்!
சத்திரந்தான் உனக்கு இடங்கொடுக்கும்!

நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானுங் கெட்டார் - சிலர்
அல்லும் பகலும் தெருக்கல்லாயிருந்து விட்டு
அதிஷ்டமில்லையென்று அலட்டிக் கொண்டார் -
விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார்! - உன் போல்
குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்!

போர்ப் படைதனில் தூங்கியவன்
வெற்றியிழந்தான்! - உயர்

பள்ளியில் தூங்கியவன்
கல்வி யிழந்தான்!
கடைதனில் தூங்கியவன்
முதல் இழந்தான்! - கொண்ட
கடமையில் தூங்கியவன்
புகழ் இழந்தான்! - இன்னும்
பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் - பல
பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா!

தூங்காதே தம்பி தூங்காதே! - நீயும்
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!

□ □ □

தனியுடைமைக் கொடுமைகள் தீர...

செல்வி ஜெயலலிதா, அ. இ. அண்ணா தி.மு.கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்தபோது, "எனக்குப் பிடித்த பாடல்" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையின் முனனுரையில்,... "பிடித்த பாடல் என்றால், எந்தக் கண்ணோட்டதில் அது நமக்குப் பிடித்திருக்கிறது என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் அல்லவா? நாட்டுப்பற்று, காதல், வீரம், பாசம், பக்தி - இப்படி பல சுவைகளை வெளிப்படுத்தும், பல வகையான உணர்வுகளைத் தூண்டும் எத்தனையோ பாடல்கள் இருக்கின்றபோது, இவற்றில் ஒன்றினை மட்டும் அனைத்திலும் சிறந்தது என எப்படித் தேர்ந்தெடுப்பது? அதற்கு எந்த அளவுகோலைப் பயன்படுத்துவது? இந்தப் பாடலைக் கேட்பதனால் மனித சமுதாயம் பயன் அடையும்; முக்கியமாக நாளைய சமுதாயத்தை உருவாக்கப் போகும் இன்றைய சிறுவர்கள் அதனால் பயன் அடைவார்கள் என்று உறுதியாக நம்மால் கூற முடியுமானால் - அத்தகைய பாடலே அனைத்திலும் சிறந்த பாடல் என்று சொல்லலாம். அபபடிப்பட்ட ஒரு பாடலைத்தான் இங்கே குறிப்பிடப் போகிறேன். என்றைக்கு இந்தப பாடலை முதன் முதலாகக் கேட்டேனோ, அன்று முதல் இதுவே எனக்கு மிகவும் பிடித்தமான பாடல்களில் நிரந்தரமாக முதல் இடம் வகித்து வருகிறது. அதுதான் - அமரா பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் இயற்றி "அரசிளங்குமரி" திரைப்படத்தில இடம் பெறுகின்ற 'சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா' எனத் தொடங்கும் பாடல்" என்று எழுதியுள்ளார்.

1961-ம் ஆண்டில் வெளிவந்த 'அரசிளங்குமரி' படததில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதி, செல்வி ஜெயலலிதாவுக்கு மிகவும் படித்தமான அந்தப் பாடல் இது -

சின்னப்பயலே சின்னப்பயலே
சேதி கேளடா!
நான் சொல்லப் போற வார்த்தையை நல்லா
எண்ணிப் பாரடா நீ எண்ணிப் பாரடா!

ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அது தாண்டா வளர்ச்சி!
ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே - நீ
தரும் மகிழ்ச்சி!

நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்
காலம் தரும் பயிற்சி - உன்
நரம்போடு தான் பின்னி வளரணும்
தன்மான உணர்ச்சி!

மனிதனாக வாழ்ந்திட வேணும்
மனதில் வையடா - தம்பி
மனதில் வையடா!
வளர்ந்து வரும் உலகத்துக்கே - நீ
வலது கையடா - நீ
வலது கையடா!

தனியுடைமைக் கொடுமைகள் தீரத்
தொண்டு செய்யடா! - நீ
தொண்டு செய்யடா!
தானா எல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா! - எல்லாம்
பழைய பொய்யடா!

வேப்பமர உச்சியில் நின்னு
பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும் போது
சொல்லி வைப்பாங்க - உன்
வீரத்தைக் கொழுந்திலேயே
கிள்ளி வைப்பாங்க!

வேலையற்ற வீணர்களின்
மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட
நம்பி விடாதே! நீ
வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து
வெம்பி விடாதே!

சின்னப்பயலே சின்னப்பயலே
சேதிகேளடா!
நான் சொல்லப்போகும் வார்த்தையை நல்லா
எண்ணிப் பாரடா! - நீ
எண்ணிப் பாரடா!

1991-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவை தேர்தலில் அ.இ.அ.தி.மு.கழகம் வெற்றி பெற்றது. செல்வி ஜெயலலிதா தலைமையில் தமிழக அமைச்சரவை அமைந்தது.

"பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவாக பட்டுக்கோட்டை நகரில் மணிமண்டபம கட்டப்படும" என்று முதல்வர் செல்வி ஜெயலலிதா அறிவித்தார். இதற்கிடையில் -

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தோடு பழகியவாகள், ரசிகர்கள் அனைத்துக் கட்சிகளின் பிரமுகர்கள், பி.ரத்தினம் பிள்ளை தலைமையில் ஓரணியில் திரண்டு, 1995-ம் ஆண்டு ஏபரல் 13-ம நாளான்று பட்டுக்கோட்டை நகரின் மையப்பகுதியில் கவிஞரின் முழு உருவச்சிலையைத் திறந்து வைத்தனர்.

"பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் கவிதைகள் நாட்டுடைமையாக்கப்படும்" - என்று அறிவிததிருந்த அபபோதைய தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, நாட்டுடமையாக்கபபடுவதன் ஈட்டுத் தொகை ரூபாய் பத்து லட்சத்தை - 1995 நவம்பர் 3-ம தேதியன்று கல்யாணசுந்தரத்தின் துணைவியார் திருமதி கௌரவாம்பாளையும் மகன் குமாரவேலுவையும சென்னைக்கு வரவழைத்து, வழங்கினார்.

□ □ □

அவன் - கவிதை காலத்தை வென்றுவிடும்!

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி, ஜெயகாந்தன் எழுதிய கவிதையில் இரண்டு வரிகள் -

"காலம் கவிஞனைக் கொன்று விடும் - அவன்

கவிதை காலத்தை வென்று விடும்!"

1951 முதல் 8-10-1959 வரையில் 57 திரைப்படங்கள்; அவற்றில் 182 திரை இசைப் பாடல்கள் ...

கவிஞர் கண்ணதாசனின் கவிதை வரிகளில் சொல்வதென்றால் "வாழும் தமிழ்நாடும் வளர் தமிழும் கலைஞர்களும் வாழ்கின்ற காலம் வரை வாழ்ந்து வரும்" பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரத்தின் பெயரும் அவரது பாடல்களும்.

பாடல்களின் எண்ணிக்கை குறைவு, ஆனால் அவற்றின் ஆயுளுக்கு எல்லை இல்லை.

இப்போதும், கருத்தரங்குகளில் பட்டி மன்றங்களில், ஆய்வுக் கட்டுரைகளில், வானொலியில், தொலைக் காட்சிகளில் 'மெல்லிசைக் கச்சேரிகளில்' நல்லிசை நாடுவோர் தம் நாட்டங்களில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களின் எதிரொலிகள் கேட்கின்றன.

இந்நூலின் பல்வேறு அத்தியாயங்களின் அவசியம் கருதி, கல்யாணசுந்தரத்தின் சில பாடல்கள் கூறப்பட்டிருப்பதால், அவற்றை மீண்டும் எழுதிக் காட்டத் தேவையில்லை.

ஆயினும், கல்யாணசுந்தரம் என்னும் எளிய, இளங்கவிஞனின் சமூகப் பிரக்ஞையை, அதற்கான வெளிப்பாடுகளை, சமயம் பார்த்து வெளிப்படுத்திய சாமர்த்தியத்தைக் கோடிட்டுக் காட்ட வேறு சில பாடல்களை வாசகர்களோடு இணைந்து நினைத்துப் பார்ப்பதில் தவறில்லை.

திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதுவது, சிலர் நினைப்பது போல் சுலபமான செயல் அல்ல. திரைக்கதை, காட்சி, கதாபாத்திரங்களின் குணச்சித்திரம் ஆகியவற்றை எதிரொலிப்பதாகத் தான் திரை இசைப்பாடல் அமைய வேண்டும்.

அத்தகையதோர் களத்தில், கல்யாணசுந்தரம், களத்தில் இறங்கிய நாள் முதல், தான் வரித்துக் கொண்டுவிட்ட லட்சியத்தை கவனத்தோடு கலை நயத்தோடு வெளிப்படுத்தினார் என்பதே அவரது சிறப்பு.

ஏழைகளின் வாழ்வின் சுகம் தா !

அவனும் அவளும் காதலர்கள்; அறம் காத்த தேவியிடம் வரம் கேட்டு, வணங்கிப் பாடுகின்றனர்; என்ன வரம்?

அவன் : அறம் காத்த தேவியே!
குலம் காத்த தேவியே! - நல்
அறிவின் உருவமான ஜோதியே
கண் பார்த்தருள்வாயே!

அவள் : ஹே மாதா! என் தாயே!
உன் பாதம் நம்பினேன் அம்மா!
சத்தியமே லட்சியமாமய்ச்
சேவை செய்யவே
பராசக்தியே நீ வரம் தா!

அவன் : துன்பம் இல்லாமல் எல்லோரும் மனம்
ஒன்றுகூடி இன்பம் கொண்டாடும் தினம்
நம் மனதில் உறுதியாகவே
மலிந்த கொடுமை நீக்கவே - இம்
மனித வாழ்வில் உயர்வு காணவே
நீ வாழ்த்திடுவாயே தேவியே தேவியே!

அவள் : ஹே! பவானி லோகமாதா!
ஏழைகளின் வாழ்வில் சுகம் தா!
சத்தியமே லட்சியமாய்ச்
சேவை செய்யவே
பராசக்தியே நீ வரம் தா!

(கல்யாணசுந்தரம் பாடலகளுடன் முதலில் வெளி வந்த 'மஹேஸ்வரி' - 1955 படத்தில் இந்தப் பாடல்)

பசியும் பிணியும் பந்தயம் போடுது!

முத்துமாரியம்மன் கோயிலிலே திருவிழா - ஊரமக்களுடன் சேர்ந்து முத்துமாரியம்மனிடம் அவள் முறையிடுகிறாள்: "இன்பம என்று சொல்லக் கேட்டதுண்டு! அது எங்கள் வீட்டுப் பக்கம் வந்ததுண்டா?"

ஓங்கார ரூபி நீ
ஆங்கார மோகினி
உக்ரமா காளி நீயே
ரீங்கார நாதம் நீ
ஸ்ருங்கார மாது நீ - என்
நெஞ்சூரில் வாழும் தாயே!

அம்பிகையே முத்து மாரியம்மா! உன்னை
நம்பி வந்தோம் ஒரு காரியமா!
ஆளை விழுங்கி ஏப்பமிடும் காலமம்மா காளியம்மா!
ஏழை, எங்கள் நிலைமையைத் தான்
எடுத்துச் சொல்றோம் கேளுமம்மா!

சமயபுரத்து மகமாயி சகல உலக மாகாளி
கன்னபுரத்து மகமாயி காஞ்சிபுரத்து காமாட்சி
குறைகள் தீரக் கொடுமைகள் மாற
கருணைக் கண்ணால் பாருமம்மா!
கும்பிடு போடும் ஏழை எங்கள்
குடும்பம் வாழ வேணுமம்மா!

இன்பம் என்று சொல்லக் கேட்டதுண்டு - அது
எங்கள் வீட்டுப் பக்கம் வந்ததுண்டா?
பண்பும் அன்பும் நிறைஞ்சிருக்குது
பணம் அதைக் கண்டு ஒதுங்கி நிக்குது
துன்பம் வந்தெங்களைச் சொந்தம் கொண்டாடுது
சூழ்நிலையும் அதுக்கு ரொம்பத் துணையாகுது!

சூதுக்காரர் தொட்டிலிலே
காதும் கண்ணும் கெட்டு - நல்ல
நீதியது குழந்தை போல உறங்குதம்மா - அதை
நினைத்து மக்கள் மனது கலங்குதம்மா!

காசி விசாலாட்சி! கன்யாகுமரி! வடிவழகி!
பேச்சி! சடச்சி! பெரியாட்சி!
காட்சி கொடுக்கும் மீனாட்சி!

தெரிஞ்சு நடக்கும் சூழ்ச்சிகளைக் கண்டு உண்மை
ஒளிஞ்சு மறைஞ்சு வாழுதம்மா - இன்று
பணிஞ்சு நடக்கும் எளியவரிடம்
பசியும் பிணியும் பந்தயம் போடுது!

கொஞ்சம் ஏமாந்தால் வஞ்சம் தீர்க்கப் பாக்குது!
தஞ்சமம்மா, உலக நிலை இது தானம்மா!
தேவைக்கேற்ற வகையில் உன்னை
போற்றுகிறோம் தூற்றுகிறோம்!
தீர்ப்பளித்துக் காப்பதுந்தன் திறமையம்மா - உன்
திருவடியைப் பணிவதெங்கள் கடமையம்மா!

அக்கினிக் காளி! பத்திரக்காளி!
அந்தரக்காளி! உதிரக்காளி!
நடனக்காளி! சுடலைக்காளி!
குறைகள் தீரக் கொடுமைகள் மாற
கருணைக் கண்ணால் பாருமம்மா!
கும்பிடு போடும் ஏழை மக்கள்
குடும்பம் வாழ வேணுமம்மா!
நெடிய சூலி! பெரும் பிடாரீ!

படம்: "பதிபக்தி"

உலகம் போற பாதையிலே...

"குறைகள் தீரக் கொடுமைகள் மாற கருணைக் கண்ணால் பாருமம்மா!" - என்று பெரும் பிடாரியிடம் மன்றாடிய அவளது காதலன் இந்தச் சமூக அமைப்பினை நினைத்து வாடுகிறான்; அதனால் சாடுகிறான்; பாடுகிறான் -

சொல்லுறதைச் சொல்லிப்புட்டேன்
செய்யுறதைச் செஞ்சிடுங்க
நல்லதுன்னா கேட்டுக்குங்க
கெட்டதுன்னா விட்டுடுங்க!

முன்னாலே வந்தவங்க
என்னென்னமோ சொன்னாங்கோ
மூளையிலே ஏறுமுன்னு
முயற்சியும் செஞ்சாங்க!

ஒண்ணுமே நடக்காம
உள்ளம் நொந்து செத்தாங்க
என்னாலும் ஆகாதுன்னு
எனக்கும் தெரியுமுங்கோ!

முடியிருந்தும் மொட்டைகளாய்
மூச்சிருந்தும் கட்டைகளாய்
விழியிருந்தும் பொட்டைகளாய்
விழுந்து கிடக்கப் போறீங்களா?

முறையைத் தெரிஞ்சு நடந்து
பழைய நினைப்பை மறந்து
உலகம் போற பாதையிலே
உள்ளம் தெளிஞ்சு வாறீங்களா?

சித்தர்களும் யோகிகளும்
சிந்தனையில் ஞானிகளும்
புத்தரோடு ஏசுவும்
உத்தமர் காந்தியும்

எத்தனையோ உண்மைகளை
எழுதி எழுதி வச்சாங்க
எல்லாந்தான் படிச்சீங்க
என்ன பண்ணி கிழிச்சீங்க?

-படம் : "பாண்டித் தேவன்"

கணவனை இழந்தவள் கட்டழகியானாலும் ..

அவனது காதலி பழைய பத்தாம் பசலித் தனங்களை வெறுப்பவள்; புரட்சிகர எண்ணங்கள் கொண்டவள்; தனது கருத்துக்களை அவனிடம் ஒருநாள் பாடிக்காட்டினாள் -

ஆம்பளைக் கூட்டம் ஆடுற ஆட்டம்
அத்தனையும் பார்த்தோம் கேட்டோம் - அதை
ஆரம்பிச்சாத் தெரியும் திண்டாட்டம்!

அடங்கிக் கிடக்கிறதும் பணிஞ்சு நடக்கிறதும்
ஆக்கிறதும் காக்கிறதும் நாங்க - உண்
டாக்கிறதும் காக்கிறதும் நாங்க - அதை
அடிச்சுப் பறிக்கிறதும் அடுத்துக் கெடுக்கிறதும்
அட்டகாசம் பண்ணுறதும் நீங்க!

ஆணுக்குப் பெண்கள் அடிமைகள் என்று
யாரோ எழுதி வைச்சாங்க - அன்று
யாரோ எழுதி வைச்சாங்க - அதை
அமுக்கிப் பிடிச்சுகிட்டு விடமாட்டேன்னு
ஆண்கள் ஒசந்துகிட்டாங்க - பெண்கள்
ஆமை போல ஒடுங்கிப் போனாங்க!

மனைவி இறந்தபின் வயதான தாத்தாவும்
மறுமணம் பண்ணிக்கிட உரிமையுண்டு - இளம்
மங்கையை முடிப்பதுண்டு மண்டைவரண்டும்! தன்
கணவனை இழந்தவள் கட்டழகியானாலும்
கடைசியில் சாகமட்டும் உரிமையுண்டு - இதில்
கதைகளும் கட்டிவிடும் ஊர் திரண்டு!

கற்பின் பலமென்றும் கண்ணகி குலமென்றும்
கச்சிதமாத் திட்டு வாங்க - அதை
அச்சடிச்சும் காட்டுவாங்க - சொன்ன
கருத்துக்கு மாறாகக் கற்பைக் களவாடக்
கன்னக்கோலைத் தீட்டுவாங்க - அவுங்கக்
கணக்கைள் புரட்டிப் பாருங்க....என்னங்க!

-படம்: "புதுமைப் பெண்"

வேர்வைகள் எல்லாம் விதையாகும் !

காதலர்களான அவனும் அவளும் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானிக்கின்றனர்.

வேலை இல்லையே என்று சோர்ந்து கிடந்தால் சேர்ந்து வாழ்வது எப்படி? ***அவன் சிந்திக்கிறான்; சிந்தித்து முடித்துப் பாடுகிறான்-***

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி - கொண்ட
கடமை தான் நமக்குப் பதவி!

பயிரை வளர்த்தால் பலனாகும் - அது
உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாரும் - இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலையுண்டு குலமானமுண்டு
வருங்காலமுண்டு அதை நம்பிடுவோம்!

சாமிக்குத் தெரியும், பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைமை - அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்
தகுந்த பலனை - இதைப்
பாடிப் பாடி விளையாடி ஆடிப் பல
கோடி கோடி முறை கும்பிடுவோம்!

காயும் ஒரு நாள் கனியாகும் - நம்
கனவும் ஒரு நாள் நனவாகும்!
காயும் கனியும் விலையாகும் - நம்
கனவும் நினைவும் நிலையாகும் - உடல்
வாடினாலும் பசி மீறினாலும் - வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம்!

-படம்: "ஆளுக்கொரு வீடு"

ஆம்புளைக்கும் தாலி !

அவனும் அவளும் திருமணம் செய்து கொள்கின்றனர்; அது புதுமைத் திருமணம்; புரட்சிகரமான நிபந்தனைகளுடன் நடந்த கல்யாணம்.

அதற்கு முன்னாலே அவர்கள் பாடி ஆடி செய்து கொண்ட ஒப்பந்தங்கள் இவை—

அவள் : போட்டுக்கிட்டா ரெண்டு பேரும்
சேர்ந்து போட்டுக்கணும் - உலகம்
புதுசா மாறும் போது பழைய
மொறையை மாத்திக்கணும்!

அவன் : போட்டுக்கிட்டா - ஆமா
போட்டுக்கிட்டா - தாலி
போட்டுக்கிட்டா

அவள் : போட்டுக்கிடும் முன்னே நல்லா
பொண்ணும் புள்ளையும் பாத்துக்கணும்
புடிக்குதான்னு கேட்டுக்கணும்!

அவன் : புரிஞ்சுக்காம ஆரம்பிச்சா
ஆபத்திலே மாட்டிக்கணும்

அவள் : கழுத்திலே தாலி கெடந்தா
காலி கூட மதிப்பான் - கொஞ்சம்
கண்ணியமா நடப்பான் - இந்தக்
கயிறு மட்டும் இல்லையின்னா
கழுதை போல இடிப்பான்!

அவன் : ஆம்புளைக்கும் தாலி கெடந்தா
அடுத்த பொண்ணு மதிப்பா - கொஞ்சம்
அடங்கி ஒடுங்கி நடப்பா - இந்த
அடையாளம் இல்லையின்னா
அசட்டுத்தனமா மொறைப்பா!
இதுலே மட்டும் போடுற முடிச்சை
இறுக்கிப் போட்டுக்கணும் - நல்லா
இழுத்துப் பாத்துக்கணும்

அவள் : பொறப்பு வளப்புச் சட்டம் ..

அவன் : நாம - சேந்து போட்டுக்கணும்!

அவள் : பொழப்பு இருப்பு நோட்டம் ...

அவன் : அதையும் சேர்த்து போட்டுக்கணும்!

அவள் : அட - வரவு செலவுத் திட்டம் ...

அவன் : ஒண்ணா சேர்ந்து போட்டுக்கணும்!

அவள் : நம்ம வழக்கமான ஆட்டம் ...

அவன் : ஹா..ஹா..ஆஹா...!

படம்: **"வீரக்கனல்"**

ஏழையைக் கடவுள் ஏன் படைச்சான்?

கிராமத்தின் சிறு விவசாயியான அவனது வாழ்வில் வர்க்க மாறுதல் நிகழ்கிறது.

வானம் தொடர்ந்து பொய்த்தது, வயல் வறண்டது.

செய்யும் தொழிலே தெய்வம் என்னும கொள்கை கொண்ட அவன் தனது மனைவியோடு, அடுததுள்ள நகரத்துக்கு வருகிறான்

ஆலைத் தொழிலாளியாகிறான்; மாதக் கூலி

மாதம் முடிந்து; சம்பள நாள்; வாங்கிய கூலியை எண்ணிப் பார்க்கிறான்; வாழ்க்கைச் செலவுகளுக்கும வாங்கிய சமபளததுக்கும் சம்பந்தமே இல்லாதிருக்கும் 'அதிசயம்' அதிாச்சியைத் தருகிறது

இதுவே வாடிக்கை எனபதை உணாந்திருந்த பழைய தொழிலாளி ஒருவர் ஆலை வாசலிலே நினறு பாடிக் கொண்டிருக்கிறார்; இல்லை: புலம்பிக் கொணடிருக்கிறார் -

கையிலே வாங்கினேன் பையிலே போடல்லே
காசு போன இடம் தெரியல்லே - என்
காதலி பாப்பா காரணம் கேப்பா
ஏது சொல்லுவதென்றும் புரியல்லே
ஏழைக்குக் காலம் சரியில்லே

மாசம் முப்பது நாளும் ஒளைச்சு
வறுமை பிடிச்சு உருவம் இளைச்சு
காசை வாங்கினாக் கடன்கார னெல்லாம்
கணக்கு நோட்டோட நிக்குறான் - வந்து
எனக்கு உனக்குன்னு பிய்க்கிறான்.

சொட்டுச் சொட்டா வேர்வை விட்டா
பட்டினியால் பாடுபட்டா
கட்டுக் கட்டா நோட்டுச் சேருது
கெட்டிக்காரன் போட்டியிலே - அது
குட்டியும் போடுது வட்டியிலே

விதவிதமாய்த் துணிக இருக்கு
விலையைக் கேட்டா நடுக்கம் வருது
வகைவகையா நகைள் இருக்கு
மடியைப் பார்த்தா மயக்கம் வருது
எதைஎதையோ வாங்கணுமின்னு
எண்ணமிருக்கு வழியில்லே - இதை
எண்ணாமலிருக்கவும் முடியல்லே

கண்ணுக்கு அழகாப் பெண்ணைப் படைச்சான்
பொண்ணுக்குத் துணையா ஆணைப் படைச்சான்
ஒண்ணுக்குப் பத்தா செல்வத்தைப் படைச்சான்
உலகம் நிறைய இன்பத்தைப் படைச்சான்
என்னைப் போலே பலரையும் படைச்சு - அண்ணே
என்னைப் போலே பலரையும் படைச்சு
இதுக்கும் அதுக்கும் ஏங்க வைச்சான் !
ஏழையைக் கடவுள் ஏன படைச்சான்?

படம் : "இரும்புத் திரை"

'காலி' என்றும் 'கூலி' என்றும் கேலி செய்யும் கூட்டமே ...

விலைவாசி உயர்வுக்கேற்ற ஊதிய உயர்வு கேட்டார்கள் தொழிலாளர்கள்; "வேலை நிறுத்தம் செய்வோம்!" - என்றார்கள்.

பேச்சு வார்த்தைக்கு அழைத்த முதலாளிகள்; "தொழிற்சாலை நட்டத்தில் நடக்கிறது" என்று பசப்பினார்கள்.

தொழிலாளர்களின் ஒற்றுமையைக் கண்ட முதலாளிகள், "காலிகள் - கூலிகள் மிரட்டலுக்குப் பயப்பட மாட்டோம்!" என்று கூறி தொழிற் சாலையை இழுத்து மூடினார்கள்.

கதவடைப்பைக் கண்டித்து தொழிலாளர் பேரணி---

பேரணியில் -

அவனும் அவளும்...

நன்றிகெட்ட மனிதருக்கு
அஞ்சிநிற்க மாட்டோம்
நாவினிக்கப் பொய்யுரைக்கும்
பேரை நம்ப மாட்டோம் - என்று
கூறுவோமடா - ஒன்று

சேருவோமடா
வீறுகொண்டு சிங்கம்போல்
முன்ஏறு வோமடா!
எளிய மக்கள் தலையில் காசு
ஏறி மிதிக்குது - அதை
எண்ணி எண்ணித் தொழிலாளர்
நெஞ்சு கொதிக்குது !
வஞ்சனைக்கும் அஞ்சிடோம்
வஞ்சனைக்கும் அஞ்சிடோம்
பஞ்சம், நோய்க்கும் அஞ்சிடோம்
பட்டினிக்கும் அஞ்சிடோம் !
நெஞ்சினைப் பிளந்தபோதும்
நீதி கேட்க அஞ்சிடோம்!
நேர்மையற்ற பேர்களின்
கால்களை வணங்கிடோம் !
காலி என்றும் கூலி என்றும்
கேலி செய்யுங் கூட்டமே
காத்து மாறி அடிக்குது - நீர்
எடுக்கவேணும் ஓட்டமே
தாலி கட்டிக்கொண்ட மனைவி
போலுழைத்த எங்களைத்
தவிக்கவிட்ட பேரை - எந்த
நாளும் மறக்கமாட்டோமே !

படம்: "இரும்புத் திரை"

இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால்...

கதவடைப்பு நீடித்துக் கொண்டே இருந்தது, தொழிலாளர் குடியிருப்பில் பசியும், பட்டினியும் வாட்டுகிறது.

பசி தாளாமல் சிறுமியொருத்தி பலகாரக் கடையில் திருடுகிறாள்.

கடைக்காரன் அடித்துத் துரத்துகிறான் -

அந்தச் சிறுமியைத் தூக்கி வைத்துக் கொண்டு அவன் பாடுகிறான்-

திருடாதே! பாப்பா திருடாதே!
வறுமை நிலைக்குப் பயந்துவிடாதே!
திறமை இருக்கு மறந்துவிடாதே!

சிந்தித்துப் பார்த்து செய்கையை மாத்து - தவறு
சிறிசா இருக்கையில் திருத்திக்கோ!
தெரிஞ்சும் தெரியாமே நடந்திருந்தா! - அது
திரும்பவும் வராமே பார்த்துக்கோ!

திட்டம் போட்டுத் திருடுற கூட்டம்
திருடிக்கொண்டே இருக்குது - அதைச்
சட்டம் போடடுத் தடுக்கிற கூட்டம்
தடுத்துக் கொண்டே இருக்குது !
திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால்
திருட்டை ஒழிக்க முடியாது !

கொடுக்கிற காலம் நெருங்குவதால் - இனி
எடுக்கிற அவசியம் இருக்காது;
இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால்
பதுக்குற வேலையும் இருக்காது;
ஒதுக்குற வேலையும் இருக்காது;
உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டா
கெடுக்கிற நோக்கம் வளராது - மனம்
கீழும் மேலும் புரளாது!

படம்: "திருடாதே"

பொறுமை ஒரு நாள் புலியாகும் ...

கதவடைப்பு நீடித்துக் கொண்டே போவதால், தொழிற்சாலையில் உற்பத்தி பாதிக்கப்பட்டு முதலாளிகளுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது.

இதைத் தெரிந்து கொண்ட தொழிலாளர்கள் உறுதி மிக்க இறுதிப் போராட்டத்திற்குத் தயாராகின்றனர்.

இறுதிப் போராட்டத்தை விளக்கி ஊர்வலம் புறப்படுகிறது. அந்தப் பேரணியில் அவனும் அவளும் அந்தப் பாப்பாவும் முன் வரிசையில் செல்கின்றனர் -

உண்மை ஒரு நாள் வெளியாகும் - அதில்
உள்ளங்களெல்லாம் தெளிவாகும்
பொறுமை ஒரு நாள் புலியாகும் - அதற்குப்
பொய்யும் புரட்டும் பலியாகும் (உண்மை)

காலம் தெரிந்து கூவும் சேவலைக்
கவிழ்த்துப் போட்டாலும் நிறுத்தாது;

கல்லைத் தூக்கிப் பாரம் வைத்தாலும்
கணக்காய்க் கூவும் தவறாது (உண்மை)

தாழம் பூவைத் தலையில் மறைத்தாலும்
வாசம் மறைவது கிடையாது;
சத்தியத்தை உலகில் எவனும்
சதியால் மறைக்க முடியாது (உண்மை)

அன்பு நெஞ்சிலே ஆத்திரம் வந்தால்
ஆண்டவன் கூட அஞ்சிடுவான்;
அறிவுக் கதவைச் சரியாய்த் திறந்தால்
பிறவிக் குருடனும் கண் பெறுவான் (உண்மை)

வம்பும் கலகமும் சிக்கலும் தீர்ந்தால்
மனிதனை மனிதன் நம்பிடுவான்;
வராத சமயம் வந்தே தீரும்
மடையனும் அதிலே திருந்திடுவான் (உண்மை)

படம்: "பாதை தெரியுதுபார்"

துன்பத்தை வெல்லும் கல்வி!

போராட்டம் வெற்றி பெற்றது; தொழிற்சாலையின் மூடப்பட்ட கதவுகள் திறக்கின்றன.

ஆலையின் சங்கு முழங்கியது.

வெற்றிப் பெருமிதத்துடன் தொழிலாளர்கள் வேலைக்குச சென்றனர்.

மாலையில் தொழிலாளர்களின் வெற்றி விழா.

பள்ளிக்கூடம் செல்லுகின்ற தம் குழந்தைகளோடு தொழிலாளர்கள் ஆடிப்பாடி மகிழ்கின்றனர் -

ஏட்டில் படித்ததோடு
இருந்துவிடாதே! - நீ
ஏன் படித்தோம் என்பதையும்
மறந்துவிடாதே

நாட்டின் நெறிதவறி
நடந்துவிடாதே - நம்
நல்லவர்கள் தூற்றும்படி
வளர்ந்து விடாதே! நீ

மூத்தோர்சொல் வார்த்தைகளை
மீறக்கூடாது - பண்பு
முறைகளிலும் மொழிதனிலும்
    மாறக்கூடாது
மாற்றார் கைப்பொருளை நம்பி
    வாழக்கூடாது - தன்
மானமில்லாக் கோழையுடன்
    சேரக்கூடாது! நீ

துன்பத்தை வெல்லும் கல்வி
    கற்றிடவேணும்
சோம்பலைக் கொல்லும் திறன்
    பெற்றிடவேணும்

வம்பு செய்யும் குணமிருந்தால்
    விட்டிடவேண்டும் - அறிவு
வளர்ச்சியிலே வான்முகட்டைத்
    தொட்டிடவேணும் - நீ

வெற்றிமேல் வெற்றிவர விருதுவரப்
    பெருமைவர
மேதைகள் சொன்னதுபோல்
    விளங்கிடவேணும்

பெற்றதாயின் புகழும், நீ பிறந்த
மண்ணின் புகழும்
வற்றாமல் உன்னோடு
வளர்ந்திடவேணும்! நீ

படம்: "குமார ராஜா"

□ □ □

ஆதார நூற்கள்
பருவ இதழ்கள்
சிறப்பு மலர்கள்

நூற்கள்

- *'கறுப்பு குயிலின் நெருப்புக் குரல்' (பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு), சு.மன்னர்மன்னன், முத்துப் பதிப்பகம், விழுப்புரம் (1985).*
- *'எனது சுயசரிதம்', கவிஞர் கண்ணதாசன், கண்ணதாசன் சாலை, சென்னை-17 (1993).*
- *'இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றுக் குறிப்புகள்', செவாலியே சிவாஜி கணேசன் சாலை, சென்னை-17 (1976).*
- *'தஞ்சைத் தரணியில் கம்யூனிஸ்ட் கட்சி', வெள்ளி விழா, மலர், ஏ.வி.ராமசாமி, 66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்-1 (1975).*
- *'தஞ்சை மாவட்டத்தில் ரத்தம் சிந்திய தியாகிகள்', எஸ்.ஜி.முருகையன், 66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்-1 (1975).*
- *'திரும்பிப் பார்க்கிறேன்', எஸ்.வி:சகஸ்ரநாமம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98 (1991).*
- *'கவியின் கனவு' (நாடகம்), எஸ்.டி.சுந்தரம், உலக நூலகம், லட்சுமிபுரம், சென்னை-14. (1974).*
- *'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்' தொகுப்பு: நாகை தருமன், பேரறிஞர் அண்ணா பதிப்பகம், சென்னை-14 (1079).*
- *'மனதைத் தொட்ட மலர்கள்', செல்வி ஜெயலலிதா, கவிதா பானு பதிப்பகம், போர்ச்சுகிசியர் தெரு, சென்னை-1 (1983).*
- *'மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்', தொகுப்பு : பி.இ.பாலகிருஷ்ணன் (13-ம் பதிப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98.*

பருவ இதழ்கள் :

- *'குண்டூசி' (நின்று போன, சினிமா மாத ஏடு)*
  - *ஏப்ரல் 1951, 'டி.எஸ்.துரைராஜ் வாழ்க்கை வரலாறு'*
  - *ஜூன் 1951, 'எம்.என்.நம்பியார் வாழ்க்கை வரலாறு'*
  - *நவம்பர் 1959, 'கல்யாணப்பரிசு வெள்ளி விழா' செய்தி*

- 'பேசும் படம்' *(சினிமா மாத ஏடு)*
    - *ஏப்ரல் 1959, கல்யாணசுந்தரம் எழுதிய 'பாட்டுப் பிறந்த விதம்' கட்டுரை*
    - *நவம்பர் 1959, 'கவிஞர் தந்த கடைசி பேட்டி'*
- 'தாமரை' மாத ஏட்டின் பல்வேறு இதழகள்
- 'ஜனசக்தி' கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடு
    - *14-9-1957, கவிஞரின் திருமணச் செய்தி*
    - *10-10-1959, கவிஞரின் இறுதி யாத்திரைச் செய்தி*
- 'குமுதம்' வார இதழ்
    - *3--5-1990, 'அந்த கவிஞன் யார்?' கவிஞரின் பாடல் - தகவல்; டாக்டர் சீ.கோ.சிவசிதம்பரம், எம்.பி.பி.எஸ்.*
- 'கதிரவன்' நாளேடு *(சென்னைப் பதிப்பு)*
    - *4-11-1995, 'பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் நாட்டுடைமைச் செய்தி'*

சிறப்பு மலர்கள் :

- தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், பட்டுக்கோட்டை
    - *ஏப்ரல் 1980, 'மக்கள் கவிஞர் பொன்விழா மலர்'*
    - *ஏப்ரல் 1985, '56வது பிறந்த நாள் மலர்'*
    - *1990, 'மணிவிழா மலர்'*
- *'மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சிலை திறப்பு விழா சிறப்பு மலர்' (1995) மலர்க்குழு: கே.ஜீவபாரதி, த.ஸ்டாலின் குணசேகரன், ஐ. உசைன்.*

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (1930-1959) பொதுவுடமை தத்துவத்தில் பூத்த கலைஞர்களில் ஒருவர். கருத்துவளம், கவிதைநயம், சிந்தனைச் செறிவு மற்றும் சமதர்ம சமத்துவநெறி சான்ற பாடல்களில் நாட்டம் கொண்டவர். தன் திறமையால் புகழ் ஏணியில் ஏறி புகழின் உச்சிக்கே சென்றவர். திரையுலகில் கொடிகட்டிப் பறந்த பாடலாசிரியர் என்றால் மிகையாகாது. மிக இளவயதினிலேயே மறைந்துவிட்ட போதிலும், எல்லோர் உள்ளங்களிலும் இன்றும் நிலைத்து நிற்பவர்.

கலைமாமணி விருது பெற்ற இந் நூலாசிரியர் **அறந்தை நாராயணன்** (பி. 1940) பல பரிசுகள் பெற்றவர். 'தமிழ் சினிமாவின் கதை', 'சுதந்திரப் போரில் தமிழ் சினிமா', 'திராவிடம் பாடிய திரைப்படங்கள்', 'விடுதலைப்போரில் தொழிலாளர்கள்' போன்றவைகளும், திரையுலகப் பிண்ணனியில் இவர் எழுதிய 'ஜக்கா', 'விண்ணிலிருந்து மண்ணிற்கு ...', 'டூப்' போன்ற புதினங்களும் குறிப்பிடத்தக்கவை. இச் சிறு நூலில், பிறமொழி வாசகர்களுக்காக, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் வாழ்க்கையைப் பற்றியும் அவருடைய படைப்புக்களைப் பற்றியும் எளிய தமிழில் விவரித்துள்ளார்.

Pattukottai Kalyanasundaram (Tamil) Rs. 25

ISBN 81-260-0578-5